உ
சிவமயம்

# வெளியீட்டுரை

## ஸ்ரீமான் மு. ஞானப்பிரகாசம் அவர்கள்
*( திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவர் )*

எல்லாம் வல்ல முழுமுதலிறைவனாகிய சிவபெருமான் உலகங்களெல்லாம் – நீக்கமற நிறைந்து நின்று – பாலின் கண் நெய் போல் விளங்கித் தோன்றுவாராயினும் திருக்கேதீச்சரம் போன்ற மாபெரும் தலங்களில் தயிரில் நெய் போல வெளிப்படையாகக் காட்சி அளித்து வருகின்றார். இந்த ஆலயங்களைத்தான், ''ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே'' என்றபடி, நாங்கள் அரன் என்றுஞ் சிவபிரான் என்றுந் நினைந்து தொழுது வருகின்றோம்.

திருக்கேதீச்சரம் பலசற்ப காலங்களையுங் கண்ட தலம் என்பதையும், தேவார திருவாசகப் பாடல்கள் பெற்ற சிறப்புத்தலம் என்பதையும் நாம் அனைவரும் நன்கு அறிவோம். விராட் என்றும் ''உலக புருடன்'' என்றுங் கூறப்படும் அப்பொருளின் மூலாதார நிலையந் திருக்கேதீச்சரம் என்பதும், ''ஹிருதயம் சிதம்பரம்'' என்பதும், ''பிரமரந்திரம் கைலாசம்'' என்பதும் எம்மால் நன்கு விளங்கப்பட வேண்டிய தொன்றாகும்.

''ஈஸ்வராணும் மஹேஸ்வர: பதினும் பதி:'' என்பதற்கிணங்க எங்கள் சமயா சாரியார்கள் திருக்கேதீச்சரப் பெருமானை அக்கரையில் நின்று காணும் பொழுது அவருடைய பதித்துவமான தோற்றமே அவர்கள் காட்சியில் தெரிவதாயிற்று. அதாவது திருக்கேதீச்சரப் பெருமானே அனைத்துலகங்களையும் படைக்கின்றார், காக்கின்றார், அழிக்கின்றார் என்ற காட்சியே அவர்களுக்கு லப்யமாயிற்று. 'மூவெயில் செற்றவன் பற்றி நின்று உறைபதி' என்றும் 'பல்லுலகினில் உயிர் வாழ்க்கை கண்ட நாதனார் காதலித்துறை கோயில்' என்றும் 'மாழையங்கயற் கண்ணி பாலருளிய கேதீச்சரத்தான்' என்றும், சம்பந்தப் பெருமான் பன்னிப் பன்னிக் கூறித் திளைப்பதை நாங்கள் தேவாரங்களிற் காண்கின்றோம்.

திருக்கேதீச்சரத்தை – அதன் பழம் பெருந் தன்மையை – அதன் இயற்கையோடிசைந்த இன்ப நிலையை – எவர் ஒருவர் உள்ளத்தால் உன்னி, மனத்தால் நினைத்து, வாயினால் பன்னிப் பன்னிக் கூற முயல்கின்றாரோ அவரே எமக்கு வாய்த்த வழிகாட்டியாகும். ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்ற பொதுமறைத் தீர்ப்பையும், யாம் இவ்விடத்தில் நினைவு கூர்தல் வேண்டும்.

எமது அருமை வாய்ந்த அன்பர் பண்டிதர் மு. கந்தையா அவர்களிடம் சைவ சமயத்தின் உண்மைகளையும், பெருமைகளையும் உள்ளடக்கிய முறையில் ''திருக்கேதீச்சர மான்மியம்'' என்ற ஒரு முழு நூல் வெளிவருதல் வேண்டும் என்று ஒருநாள் கேட்டதாக ஒரு ஞாபகமுள்ளது. இரண்டு மாதங்களுள் மேற்படி நூலின் முழுப்பெரு வடிவத்தையும் தாம் மேற்கொண்டிருக்கும்

திட்டத்தையும் தாம் அமைத்திருக்கும் காண்டங்கள், சருக்கங்கள், படலங்கள் முதலியவற்றையும், எமக்கும் உயர்திரு சி. சரவணமுத்துச் சுவாமிகளுக்கும், வேறு சில திருக்கேதீச்சர அன்பர்களுக்கும் விளக்கிக் கூறிக் காட்டினார்கள். திருவருட் டுணையினாலும், மேற்படி குழுவினர் காட்டிய ஊக்கத்தினாலும் பண்டிதர் அவர்கள் தமக்கே இயல்பாக அமைந்துள்ள புலமைத் திறனாலுஞ் சைவ ஞானச் சிறப்பாலும் 800 பாடல்கள் கொண்ட முதற் காண்டத்தை ஒரு சில மாத எல்லைக்குள் எழுதி நிறைவேற்றிக் குழுவினர்க்குக் காண்பித்தனர். பழமையும் புதுமையும் பொதுளிய எளிய தமிழ்ச் சொற்களால் இக் காலத் திற்கேற்ற முறையில் வெளிவரும், மஹத்துவம் வாய்ந்த நூல் என்று குழுவினர் வியந்து பாராட்டினர். குறித்த "திருக்கேதீச்சர மாண்மியம்" முதற் காண்ட நூலையே இன்றைய தினம், திருக்கேதீச்சரப் பெருமான் சந்நிதியில், சந்நிதி மண்டபத்திலே வெளியிட எண்ணியுள்ளோம். இதனைத் தொடர்ந்து வரும் ஐந்து காண்டங்களையும், திருக்கேதீச்சரப் பெருமைகளையெல்லாம் உணர்த்த வல்ல கோயிற் கோபுரப் படங்களுடனும், கல்வெட்டு, சாசன எழுத்துக் குறிப்புகளுடனும் வெளியிடுவதற்குரிய ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமானின் திருவருள் வெள்ளம், முன்னும் பின்னுமாம் எங்கணும் பெருகி உறுதுணையாய் நிற்ப வெளிவரும் "திருக்கேதீச்சர மான்மியம்" என்னும் இந்நூல் இக் கேந்திர பூமியில் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் சைவ எழுச்சிகள், சைவ இயக்கங்கள் ஆகிய அனைத்திற்கும் கட்டியம் கூறிக்கொண்டு வரும் ஒரு முன்னோடிப் பெருநூலாகவே நாங்கள் கொள்கிறோம்.

பல்வேறு குழப்பங்களுக்கும் மத்தியில் உதயமாகி வரும் "ஞான சூரியன்" போன்ற இந்நூலின் வெளியீட்டுக் குழுவினர், இதன் அருமையையும் பெருமையையும் நோக்கி, இது திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையின் வெளியீடாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். இக் காலநிலையில் சைவத் தமிழ் உலகம் எங்கெல்லாம் வியாபித்திருக்கின்றதோ, அங்கெல்லாம் சென்று இந்நூல் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்வதினால் வரும் வருவாயெல்லாம் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைக்கே உரியது என்பதையும் யான் இத்தால் அனைவருக்குந் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க திருக்கேதீச்சர மான்மியம். வாழ்க இதனை ஆக்கியளிக்கும் மு. கந்தையா அவர்கள்.

சுபமஸ்து

# அருஞ்சொல் விளக்கம்

## காப்பு

முந்தும் – சகல தோற்றங்கட்கும் முற்பட்டுத் தோன்றும். மாமனு – மஹாமந்திரமாகிய பிரணவத்தை. மூலம் – மூலாதாரத்திலிருந்து, சுழித்து– இடமிருந்து வலமாகச் சுழித்து, எழீஇ – எழச்செய்து. பந்தம் மாற்றி – (உயிரை) பந்த நிலையிலிருந்து மாற்றிச் சுத்த சைதன்யமாக்கி, பரன் கயிலைக்கு – மேலான சிவன் உறையுந் திருக்கயிலைக்கு. உயிர் உந்த – உயிரைச் செலுத்துமாறு. மிக்குயர்ந்தோங்கும் – மிகவும் உயர்ந்து நிமிர்கின்ற துதிக்கை நீள் – துதிக்கையை நீட்டும் – சிந்துர ஆனனன் – ஆனைமுகம் போலும் முகமுடைய விநாயகப் பெருமானது, சேவடி – செவ்விய திருவடிகளை. போற்றுவாம்- துதிப்பாம்.

இது வழிபடுகடவுள் வாழ்த்தாம் எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுள் வாழ்த்து மாதல்காணத் தகும்

2. வலபை – வல்லபை, விநாயகர் சக்தி. உள்ளுறுத்து – உள்ளடக்கி, விநாயகர் கிரியையை உள்ளடக்கிய ஞானசொரூபம்: எல் – ஒளி. இபம் – யானை.

3. பழங்கிடை – முன்னமே யுற்றுக் கிடப்பது. வியன் – பெரிய

4. உடுக்கங்கோதுமொலி – உடுக்கு அங்கு ஓதும் ஒலி, புகல்–அடைக்கலம்

6. கேழ் – நிறம். அழகெழும் – அழகு எழும். வாகனம் – குதிரை இடபம் போல்வன. யானம் – தண்டிகை, பல்லக்குகள் போல்வன.

7. அஃதான கீர்த்தி – அதற்கு விளைந்த கீர்த்தி

8: மத்து – மயக்கம், மதக்கொலைஞர் – சமய சாதனங்களை அழிப்பவர்கள்.

9. சின்முத்திரை – ஞானமுத்திரை- வலக்கரத்திற் சுட்டு விரல் வளைந்து பெருவிரலடியிற் பொருந்த அமையும் முத்திரை, ஐதார் – அழகார்ந்த

10, செங்கேழ் – செந்நிறம், திருவாள் மழு-திரு ஆள் மழு. பங்கேருக சேற்றில் வளர்வது தாமரை.

12, தேகதர்மநிலை - உயிர் உடலொடு பொருந்தி வாழும் நியம நிலை. நாமம் + ஆர் நாமம் — புகழ். சீமான் – ஸ்ரீமான் - இலக்கு மியோடிருப்பவர்.

13. வீக்கதூக்கம் – எழுச்சி வீழ்ச்சிகள், ஆறு – விட்டு விலகா துடனிருந்து காணும். நானவித – பலவித. இடுக்கட் கிடுக்கண்- கஷ்டத்துக்குக் கொடுக்குங் கஷ்டம்.

15. மரு – மணம், மருமம் – நெஞ்சு. மருமம் உண்டு – இரகசியமுண்டு மர்மம்-இரகசியம்.

16. மேவிருபால்–மேவும் இருபால்–மேவும்.பொருந்தும்:

18. அகந்தைச் சிரமம்-கர்வத்தால் நேருங் கஷ்டம். உணர்வர-உணர. பிமரம்:-மயக்கம்.

19. மாயக்கடம்-வஞ்சனைக்காடு. கடந்தா ள் தாண்டியவள்:

20. சேத்ரபாலகன் - க்ஷேத்ரபாலகன்: க்ஷேத்ரம்-தலம்- பாலகன்-காப்பவன் படுகன்-இளம்பிரமச்சாரி: படு-பிரமச்சாரி. படுக-இளம் பிரமச்சாரி:

22. அநீஸ்வரன்-தனக்குமேல் ஈசுவரன் இல்லாதவன். ஓர்தலம்-திருநள்ளாறு. கிளக்கும்-உரிமைகோரும்.

23: இமகரன்-பனிக்(குளிர்)கிரணங்க ளுள்ளவன்.

24. தன்னனைவார்-தன்னை அணுகித் தொழுவோர் .'செங்கதிர்த் தேவனைப் போற்றுவோம் - அவன் எங்க ளறிவினைத் தூண்டுக, என்பர் பாரதியார்

26. இலங்கணி-விளக்கமான ஆபரணம். திண்காத்திரம்-வலிய உடற்கட்டு.
27. மாதிரம்-திசை, கட்கம்-வாள்.

28. தூரியன்-தூரத்தி லுள்ளவன், அணியன்-பக்கத்தி லுள்ளவன். பெரிய வாய்மை-பேருண்மை.

29. மெய்பொடிப்ப,உடல்சிலிர்க்க. தமிழுக்குத் திருநிலை-திருநெறிய தமிழ் என்னும் நிலை. கண்டிகை - உருத்திராக்க மாலை. ஓகை - உவகைக் கிளர்ச்சி,

30. கன்று-மான்கன்று,

31. பீடு--பெருமை. பிறங்க-விளங்க. சிகி-கேது.

32. மெய்ந்நிலை-மெய்யுணர்வு நிலை.

33. பிரசம்-தேன், பிரசமலர்-தேனருமலர்.

36. பாதசாலம்-காலணி. பிம்பம்-கொவ்வைப் பழம்.
39. வைகல்-தினமும். மாமேகத்துக் கறை-கருமேக வடிவான நீலக்கறை,

## நாட்டுப் படலம்

1. பாட்டளி-பாடும் இயல்பினதாய. வண்டு, கோட்டம்-கோயில். வேட்ட விரும்பிய. மெல்லியலார்-பெண்கள் (சரஸ்வதியும் இலக்குமியும்) நாட்டசீர்மை -நாட்டினது சிறப்புகள்
2. பருமும்-விம்மும். ஒராயிரம்படி-ஒராயிரம்மடங்கு .பொருவிலாத-ஒப்பில்லாத. இளஞ்சேய்-சின்னச் சிறுமி.
3. பூந்தலை வன்னச்சிட்டு-மென்மையான தலையோடு விளங்கும் அழகிய சிட்டு. இச்செய்யுள் முடியே மேற்செய்யுள் முடியுமாம்.
4. புலன்நுகர்வேட்கை- புலன்களின் திருப்திக்கு உரியவற்றைத் தேடி அனுபவிக்கும் விருப்பம் . மாதிரம்-திசை ,வாவி- தாவித்திரிந்து.
5. எப்பாடும்-எப்பக்கமும் ஓர்புடைநாடுவார் - ஒரே இடத்தில் வைத்துக் காணவிரும்புவோர். பொன்மூடுபேழை-பொன்னாற் செய்த மூடு பேழை

6. நம்பர் சந்திரசேகரம்–நம்பர்–சிவன், சந்திரசேகரம் - இலங்கைத் தென் கரை யோரத்திற் புதைபொருளாய்ப் போயிருக்கும் பழையபெரிய சிவாலயம்.

7. சீர்பம்பும்–சிறப்புகள் அதிகரிக்கும் . இம்பர் - இவ்வுலகம்

8. ஆலும் பேர் அலை– அசைந்து கொண்டிருக்கும் பெரியஅலை. ஆடல்-விளையாடல்கள். குணதிசை– கிழக்குத் திசை.

9. கோடு-சிரம்.சைலம்-மலை. குவைறேஸ்: மேல்நாட்டு ஆராய்ச்சி யாளரில் ஒருவர். கோணேஸ்வரம் போர்த்துக்கேயர் அட்டூழியத்துக்கு இலக்காவதற்குச்சில நாட்களுக்குமுன்பு கோணேஸ்வரத்தைத் தரிசித்தவர். கோணேஸ்வரம்ஈழநாட்டில் உள்ளஇந்துக்களின்ரோமாபுரி என்பதுஅவர் வரைந்தகுறிப்பு. சினகரம் – கோயில்.

10. போர்த்தர் - போத்துக்கேயர். ஆத்தர் – ஆப்தர். தெய்விக உண்மையிற்பிடிமானமுள்ளவர்கள். பேர்த்தும்–மீண்டும்.

11. மீளகில்லாதெனினும்– மீட்டுக்கொள்ளல்முடியாது என்றநிலை இருப்பினும், நமர்– நம்மவராகிய இந்துக்கள்

12. கேழில்சிற்பம் – ஒப்பற்றசிற்பம். கற்றளி. கற்கோயில்

13. மகாவலிமாடு – மகாவலிக்கரையில். கரசை – ஈழத்தில் அழிந்த சிவஸ்தலங்களில் ஒன்று மகாவலி சங்கமத்தில் உள்ளது. திருக்கரசைப் புராணம் இன்றும் இதனைப்பற்றி அறிவிக்கும் இப்புராணம் மூதூரையண்டிய இடங்களிலெல்லாம் படனஞ் செய்ய பட்டுவருதல் கண்கூடு.

14. எண்ணு சிற்பஎழில்—மதுரைச் சிற்பமும் இராமேஸ்வரச் சிற்பமும் என்பவற்றின் மகிமையை எண்ணிப் பார்க்க வைக்கும் சிற்பஅழகு. கற்றளி-முற்றிலும் கருங்கல்லால் அமைந்த ஆலயம். கொச்சிக்கடைச் சிவன்கோயில் மகிமை இத்தகையது.

15. குரகதக் கதி – குதிரைநிரையின் பாய்ச்சல் வேகம். குரகதம் – குதிரை மரகதப்பொன் இலிங்கம்– காலிச் சிவன்கோயில் மூலமூர்த்தி மரகதலிங்கம் என்பர்.

16. கேழ்வரகு– குரக்கன், தலைநீங்க எஞ்சும் ஒட்டு - கதிர் கொய்தபின் மிஞ்சியிருக்கும்ஒட்டு. தினை குரக்கன் பயிர்களில் கதிர்கிள்ளி எஞ்சியதண்டை ஒட்டுஎனல் விவசாயிகள் பரிபாஷைகளில் ஒன்று. எரியாதிருந்திடல்தொட்டு-எரியாது பச்சையாய் இருந்த அற்புதந்தொட்டு .

17. வடிவழகி--முன்னேஸ்வரத்துச்சிவன் அருட்சக்தி. எப்படிவமும் –எந்தவடிவமும். உயர்மாண்பிற்கு முடிவுறுத-தனது உயர்ச்சிக்கு எல்லையற்ற

18. அன்ன ஐயனார் ஆலயம்-அத்தகைய அற்புதச் சிறப்புடைய ஐயனார் ஆலயம். அத்தகைய என்பது தன்னயலில் எதிர் பாராத வகையிற் சிவாலயமொன்றுதோற்ற.வைத்த என்றகுறிப்பாம். அற்புதசாகச மூர்த்தியெனப்பக்த சனங்களாற் புகழப்படும் அத்தகைய ஐயனார் எனலுமாம்.

19. முக்கட்டாதை—முக்கண் தந்தை இரு சந்நிதிக்கணேமக்கட்காணும்–ஒரு சந்நிதிபோதாதென்று இருசந்நிதியாய் இருந்து மக்களைக் காணும்.

20. கோணைநாயகர்— ஒருகால்தூக்கி மடக்கிநிற்கும் நாயகர். இவர்தம்பல காம ஈஸ்வரத்தில் கவர்ச்சியளிக்கும்மூர்த்தி. முன்புகோணேஸ்வரத்தில் இருந்தவர் என்றும் அதுஅழிபட்ட காலத்தில் தம்பலகாமத்திற் குடில் கொண்டார் என்றும் கூறுவர். தாணு-நிலைத்திருப்பது

21. பொன்னின் ஆலை-பொன்னுலை, பழுகாமம்-மட்டக்களப்பில் ஓர்நகர். மல்வில்-பளைவட்டாரத்தில் உபயவல்லிபுரம் போல அமைந்த விஷ்ணுதலம்

22. சிப்ரதாயினி—க்ஷிப்ர பிரதாயினி-விரைவாக (உடனடியாக)க் கொடுப்பவள்

23. தாவரம்—மூர்த்தி. ஆவரம் பிட்டிமுத்துமாரிமூலத்தானத்தில் மூர்த்தி வேண்டாமல் ஒருபெட்டியில் அமர்ந்திருப்பது கண்கூடு. ஆவரம்பிட்டி-அராலியில் ஓர் இடம்

24. ஆர்த்தி-ஆசை. காருடம் — ஒட்டிசுட்டான் புதுக்குடியிருப்புப் பாதையில் கருடப்பாறை எனவழங்குமிடத்தில் உள்ளதீர்த்தம்

25. நவகிரி-நவக்கிரி, திருவடி — திருவடிநிலை

27. வையம் வாவும் விவிலியம்-உலகம் முழுவதினும் பரவியிருக்கும் கிறீத்தவம். சால்பிற்று-மகிமை யுடையது.

28. விராட்புருடன்-உலக அமைப்பின் இலட்சிய வடிவம். உலகபுருடன். முப்பெருநாடி-இடை பிங்கலை சுழுமுனை.

29. ஆதிநாகர்-இலங்கைப் பூர்வீக குடிகள், ஆயம்-உறைவிடம். மூலன்-திருமூலர்.

30. பாயசீர்-பரந்துபட்ட சிறப்பு. சேயஇச்சிறப்பு -செம்மை மிக்க இந்தச் சிறப்பு. செயத்தம்பம் - வெற்றித் தூண், சீபதம் - ஸ்ரீபாதம். மத்தவாரணம்-மதயானை, மருதை - மருதடி. போதி, அரசமரம்.

33. குமரகோட்டம் - முள்ளியவளைப் பகுதியில் உள்ள பழங்காலத்துச் சுப்பிரமணியதலம், வில்லூன்றி - திரிகோணமலைச் சுப்பிரமணிய தலம், ஆறுமுகரை மூலமூர்த்தியாகக் கொண்டது. பிறங்குவ-விளங்குவன

34. வராகி - பன்றித்தலைச்சி, பேய்ச்சி - பேய்ச்சி அம்மன். ஈழநாட்டிற் பேய்ச்சி அம்மன் கோயில்கள் இராஜராஜேஸ்வரி கோயிலாக மாற்றம் பெற்று வருதலால் பெயர்தற்போது வழக்கிழந்து வருகிறது. அத்திஊர் ஐயனர்- ஆனைவாகனமேறு ம் ஐயனர்.

35. புத்த ஆகமத்தோர்- பௌத்தர். ஆகமம் - சமயம் என்ற பொருளிற் பௌத்த ஏடுகளில் வழங்கும். புரிந்துணர்வு - பரஸ்பர விளக்கம்

37. கடகமாசம் - ஆடிமாசம். இடபமாசம் - வைகாசி மாசம். துளக்கும் அசைக்கும். கந்த தெய்யோ - சிங்கள மொழியிற்சுப்ரமணியருக்கு வழங்கும்பெயர். சாதுசாது கருணவாய் - சிவனெளி பாதயாத்திரிகர் செய்யுங் கோஷம்.

39. நீங்கி - நீங்க ( செயவெனெச்சத்திரிபு )

40. பீதுறுகாலம் -பீதுறுத்தாலகாலமலை. தருக்கள்துன்றும் - மரங்கள் நெருங்கியுள்ள .

41. துற்றுறும் மயிர்ப் போர்வை - இறுக்கமாகச் சுற்றிய மயிர்க்கம்பளி. பெற்றங்கள் - பசுக்கள். சுரித்தெழுந்து - கல் அளைகளுக்கு ஊடாகத் தோன்றி எழுந்து. கடுகுவ – விரைந்து செல்வ ன.

50. துடி – உடுக்கை. குமுக்கு – குடமுழா வென்ற வாத்திய ஓசையின் பெயர். உறுமல் - கரடிகை என்ற வாத்திய இசையின் பெயர். வெடிபடும் அருவி – ஒலியைத் தோற்றும் அருவி.

51. பொடிக்கொள்-புழுதிமயமான. புவர்சுவர் – பூலோகத்துக்கு மேலுள்ள லோகங்கள் . அதலம் – பாதாள உலகங்களி லொன்று

52. மான – ஒப்ப. தேச் செடிகள்-தேயிலைச் செடிகள் .சைலபூமி – மலைப்பிர தேசம் .

53. வினைஞர் - தொழிலாளர். பொற்பிற்று – அழகு உடையது .

45. மக்கட் பொம்மல் - மக்கள் தொகுதி. தூமவண்டி – புகைவண்டி

55. நூற்குப்புறநடை. அகத்திணை நூல்கள் கூறும் குறிஞ்சி இலக்கணத்துக் குப்புற நடை. நறவலர்குறிஞ்சி – தேன் பிலிற்றும் பூக்களையுடைய குறிஞ்சி

56. வீரமாநகர்-இராவணனுடைய இராசதானி. ஆய்வினர்கள்– ஆராய்ச்சி க்காரர்.

57. நாரநீர் அருவி–குளிர்ந்த நீர் அருவி. கூர் உகிற் பறவைஈட்டம்–கூரிய நகமுள்ள பறவைக் கூட்டம்

58. ஐ வகை இடம்—இலங்கையில் நீர் வீழ்ச்சிச் சிறப்புள்ள ஐந்துஇடங்கள் லக்ஷபானு, துங்சிந்தை, திய லும, அபர் டீன், நனுஓயா என்பன

59. பே எப்பயில் வளவை—அச்சந் தருந் தன்மை வாய்ந்த வளவைகங்கை பே எம்-அச்சம்

60. தேஎப்பயிர்–தேயிலைச் செடி.சீர்ப்புயர்வயல்-அழகு தோன்ற அமைக்கப் பட்டவுயல்கள்

61. ஐயநற் படைவீடு—அதிசயிக்கத்தக்க நல்ல படைவீடு

62. மானும்-ஒக்கும்- பண்டராவளை-பண்டாரவளை.பெரதை–பெரதேனியா கோநகர்ச் செவ்வி-தலைநகர்த்தன்மை

63. கோமுறை வழுவாது–ஆட்சி முறைமை வழுவாமல். தமரம்–ஒலி.வமன ன்–வாமனன்

64. பச்சிலைப்படலை–பசிய இலைவரிசை,பயோதரம்–முகில்,தொன் நூல்வாய் மை–தொல்காப்பிய உண்மை

65. பீடு கூர் புதர்–துன்பந்தரும்பற்றை, இருட்புக்கில்–இருளுக்குஒதுக்கிடம்

66. அநித பல்கோடி–அளவற்ற பலகோடி,நாடெலாம் வளர்க்குங்காடு-எல் லா நாட்டவரும் காட்டு வளர்ப்பை விசேடமாக மேற்கொள்வர். காடே நாடெல்லாவற்றையும்வளர்க்கும் எனவும் கொள்ளலாம். ஆஸ்ரயம்– அணைவிடம்

67. விலங்கி நீள் மருப்புமேதி–நேரே எழாமல் பக்கம் விலகி நீளுகிறகொம் புள்ள எருமை. சட்டகம்–குறிப்பேடு

68. இட்டிடைச் சிறுநெறி – மிக ஒடுக்கமான சிறியபாதை. கட்டழல்-கண்ணில் இருந்து சொலிக்கும் அக்கினி. சேக்கை-தங்குமிடம். கேளிர் உறவினர் காமம்நாடி- பிரியத்தை இடமாக வைத்து. உலுத்தர்– பேராசைக்காரர் முறைகேடாகத் தம் காரியம் பார்க்கும் பேராசைக்காரர்

69. இம்பர் மையல்தீர்ந்து-இவ்வுலக மயக்கம்தீர்ந்து. வவ்விச்சேர்ந்து-கவ்விக்கொண்டுநின்று. அடர்க்கும்-துன்புறுத்தும்

70. கரிகுடும்பப் பண்பாடு-யானையின் குடும்பப் பண்பாடு

71. மகப்பேற்று வைத்யம்- பிள்ளைத்தாய்ச்சிக்குச் செய்யும்சுசுருஷை. பந்தோபஸ்து அளிக்கும் தந்தி-பாதுகாப்புக்கொடுக்கின்ற ஆனை

72. ஓர்நோக்கில்–தனது துணைவியின் மார்பைத் தீண்டும் நோக்கில், சஞ்சலம்–அலைச்சல். தேன் இருல்-தேன்கூடு. எண்கு–கரடி.

73. பிளிறல்–ஆனை ஒலி, முர்முர்-பன்றியின்ஒலி, கூச்சல் – கரடிஒலி. ஏனம் பன்றி. விரகம்-காதல்வேட்கை. முற்றி முளிகழை - முற்றிக் காய்ந்த மூங்கில்.

74. கவடு-மரக்கொப்பு. விருட்சசாலம்-மரத்தொகுதி

75. சிற்பமாய்ச் சிவன் வாழ் – சிவன் சிற்பமாய் வாழ். சிகிரியாக் கோட்டையுள் உள்ள ஆண் பெண் சிற்பம் சிவன் பார்வதி சிற்பமெனல் பிரசித்தம். உற்பவித்தெழுந்த – தோன்றி எழுந்த

77. செம்புலம்பட – பயிர்ச்செய்கை நிலமாக, சேனை – காடழித்துப் பயிரிடும் பிரதேசம்.

78. முட்டி முடுகும் மோட்டெருமை – இடிக்கும் முயற்சியோடு நெருங்குகின்ற மோட்டுத்தனமான எருமை. சுயநலம், பகை, ஆங்காரம், ஆணவம்: என்ற நான்கிற்கும் நரி, சர்ப்பம், புலி, யானை நான்கையும் முறையே உவமானமாகக் கொள்க.

80. விருத்திக்கு விலங்கிடாது – குடும்பக் கட்டுப்பாடு செய்யாமல்

81. இத்தகு நலம் – திருப்தியான சுதந்திரநிலை

82. ஜெளாநிக்காடு – அனுராதபுரக் காட்டில் மிக அடர்ந்த ஒரு பகுதி மெய்யுணர்ந்து – ஞானம் பெற்று

83. உபாதானம் – காரணம், கழனி – வயல். மருதம் – வயல் சார்ந்த நிலப்பரப்பு

84. வாகு மிகு மன்னர் – வலிமை மிக்க அரசர்,

85 மோட்டுயர் வல்லணை – பெரிய அளவிலான உயர்ந்த வலிய அணை தோட்டமைத்த குளம்– தோண்டி அமைத்த குளம்

86. தளங்கொள் பூதம் – அவ்வவ்விடத்தை ஆஸ்ரயித்திருக்கும் பூதங்கள் குளம் கொண்டகோடு – குளத்தினது கரைகள், மாவலி – மகாவலி கங்கை, வளம் – நீர்வளம், உளங்கொண்ட – கருதி அமைத்த

89. ஊட்டச்சத்து – உரம், ஊரவுநீர் ஏரி – பரந்த நீர்ப்பரப்புள்ள ஏரி

90. உயர் பண்பு ஐந்து – அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, ஒல்வகை – பொருந்தும் வகை, கால் – வாய்க்கால்

91. சேவினம் – எருதுகள். இழுதுபட – நெய்போலாக, சீர்செய்யும் ஒலி– பலகையிட்டுப் பரம்படிக்கும் ஓசை.

92. ஹரிஹர புத்திரர் – ஐயனார். தாற்றுறு பைங்கதலி – குலையோடு கூடிய வாழை, தாறு – குலை

94. பாட்டிசை – உழத்திப்பாட்டின் இசை. துழனி – ஆரவாரம், களமாருங்காதல் வயல் நிலத்தை அரங்காகக் கொண்டு அமையுங் காதல் லீலைகள்.

96. ஆர்த்தி – ஆசை, மருதஇறை – மருதத்தெய்வமான இந்திரன்

98. வாலிசர் – குறும்புத் தொழிலாளர், வாலியர் – தூய்மை உள்ளோர் வாழ்பகை – வாழ்வுக்குப் பகை, சாலி – நெல், வன்களை – வலியகளை

99. முகில் பொழிதோ றெட்டி நிமிர்தல் – மழை சொரியச் சொரிய நெற் பயிர் பார்த்துக் கொண்டிருக்கவே திடிர் திடிரென்று உயர் அழகு உழத்தியர் – தாயர். பயிர் – சேய்

101. குழந்தையிடத்திற் பரிமளிக்குந் தாயன்புக் குளிர்மை இங்கு பயிர்க ளிடத்திற் காணவுள்ளது. தால் – தாலாட்டு.

102. செஞ்சாலி – நெற்பயிர், இக்குவனம் – கரும்புக்காடு, பூகம் – கமுகு. சாற்றுவளம் – சாறுகிய தன் வளம்

103. வீழ்புலன் – விரும்பும் புலன்

104. பாய – பரந்த, நிரைநெடு நீர் – நிரைத்துவரும் நீர் நெடுகும் பரப்புடைய கடல்

105. காலிலாக்கலம் – சில்லில்லாத மரக்கலம்

106. சலதித் துன்றுமீ – கடலின்கண் சேரும்

107. வதுவை – கல்யாணம், அதன்கண், யாறு – மணமகள், கடற்றிரை மணமகன். திரையிலெழும் நுரை வெண்ணிற மேற்கட்டி, (வெள்ளை கட்டடல்) சங்கு மங்கல வாத்தியம்.

108. தம்பதியுவரென்கைசழக்கோ – ஆறும் கடலுமாகிய உவர் தம்பதி யெனக் கருதப்படுதல் பொய்யோ. சழக்கு இங்கு கற்பனை என்ற பொருளில் நின்றது. கற்பனையல்ல அது யதார்த்தமே என்றவாறு ஆறு சென்று கலக்குஞ் செயலின்றேல் நீர்ப்பிராணிகளுக்கு உற்பத்தியில்லை என்பது பிரசித்தம். நெடுங்கடலுந் — — என்ற குறளுரை நயங்காண்க. கல்யாணமில்லாமற் சிசு உற்பத்தி ஏது?

109. பணிலம் – சங்கு, நணிய் – நண்ணிய – அணைந்த, கணிதமில் – எண்ணற்ற, குவை – தொகுதி

111. அளிய ஊண்சுவையமுதம் – உப்பு, மேதையர் – அறிஞர்

112. ஆத்திகத் திருக்கோலம் – உள்பொருட் கோலம், நெய்தல் பேர்த்த– நெய்தற் பெயர் பெற்ற

114. வெள்ளிப்பாளம் – மீன்தோற்றம். பேரம் - விலைக் கேள்விப் போட்டி

115. ஒட்டார் தகைத்து - விடாமற்றடுத்து, உணங்கல் - கருவாடு, காரண்டம் – கரண்டம் - நீர்க்காக்கை, உவணம் – பருந்து, கிளரொலி– விசைத்து மேலெழச் சிறகடிக்கும் ஒலி

116. வான்தூர்த்த – வான்வெளியை நிரப்பிய, கனைகடல் - ஒலிக்குங் கடல் அனையவாகிய ஒலி பல கனைகடற் கொலியிலை கொல் என்றெண்ண வைக்கும் என்க,

117. ஓர்த்த • உணர்ந்த, ஐம்புல வேட்டை - ஐம்புலனுக் கிரைதேடும் வேட்கை.

119. நானிலத்தியற்கை - குறிஞ்சி முதலிய நால்வகைத் திணைகளுக்குமாந் தன்மை, நானிலம் என்றது பெரும்பான்மை பற்றிய வழக்கு தென்னர் நற்றமிழ் - பாண்டியர் வளர்த்த தமிழ், இங்கு தமிழ் என்றது தமிழ் முதனூலாகிய தொல்காப்பியத்தை. அணி – அழகு அணியதோர் நகரம் – அழகிய ஒரு நகரம்

---

உ

## நகரப்படலம்

1. அவ்விரண்டினுக்காங்கரு - அருவுக்கும் உருவுக்குந் தோற்ற மூலமாயிருக்கும் அருவுரு. உரு - புகழ்

3. ஆர்த்தி கூர்தரும் - பிரியம் மிகும். இங்ஙன் – இத்தலத்தில்

4. வேட்ட-விரும்பிய. மாதவ நாயகி - தவநாயகியான மா – இலக்குமி பதியிலிட்டு - பதித்துவைத்து. அவை - தவப்பலன்களை. ஈட்டமாக – தொகுதியாக, ஓம்பல் – பாதுகாத்தல், மாதோட்டம் - இலக்குமியின் தோட்டம், தோட்டம் - பயிர்த் தொகுதியை உணர்ந்துஞ் சொல்

5. மாருதம் – வாயுதேவன், அருகம் - தகுதியுள்ளது

6. மானம் – பெருமை, மட்டித்து – நிறைத்துத்தேக்கி. கான இன்னிசைக்கீதம் – இனிய நட்டராகப் பண்ணமைந்த தேவாரப் பாடல்

7. ஓர்ந்து - உணர்ந்து, மாதித்த - மஹாதீர்த்த என்ற வடசொல் பாளிமொழியிற் பெற்ற வடிவம், தீர்த்த – புனிதம்

10. வித்தகம் – சாதுரியம். பத்திரத்தொழில் – இலைவடிவச் சித்திரம் யோகநற்புரவி - நல்ல இலட்சணங்கள் வாய்ந்த குதிரை. ஓகை – உவகைக் கிளர்ச்சி. பரிந்தீனும் - வருந்தியீனுந்தாய் போலக் கஷ்டப்பட்டு இறக்கும்.

11. மைக்கிரி - மைநாகமலை, அனைய - ஒப்பன, மிகத்துறுத்து – மிக நெருக்கி ஏற்றி

12. சிலைவடிக்கொள் – கல்லில்வடிக்கப்பெற்ற

15. குவைஇ – குவிந்து, துன்ற – நெருங்க

16. சங்கத்…………..,செய்யுன் – சங்கவிலக்கியச் செய்யுள்

17. முந்தை – பழைய, அரண் - கோட்டை, சோ – அரண்.

19. ஏறும் ஆறுகொள் இருபது – இருபத்தாறு. நாணயத்திறம் - நாணய வகை. 26வகை நாணயம். ஊர்ஜிதம் – உறுதிப்படுத்தப்பட்டது.

21, நுண்புலம் – அறிவுக்கூர்மை. கற்றநுண்புலம் – கற்றறிவோடு இயற்கை நுண்ணறிவுமுள்ள. கண்ணுள் வினைஞர் - சிற்பத்தொழிலாளர்.

22. சுராட், சம்ராட், விராட் என்பன பிரமத்தின் மூன்றுநிலைகள், இவை முறையே தூலநிலை, சூக்குமநிலை, காரணநிலைகளாகக் கொள்ளப்படும். உலகத் தோற்றத்துக்குக் காரணமாம் நிலையில் பிரமம் 'விராட்' இதுவே ஐந்துமுகம் தாங்கி உலகைப் படைத்தல் முதலியன செய்யும். ஒராட்குளபொறுப்பு – ஒராட்பொறுப்பு.

23. மனுமுன்னுகச் சொன்னஐவர் - மனு, மயன், துவஷ்டா சிற்பி, விஸ்வஜ்ஞன்

24. கொன்னுறும் – பெருமைவாய்ந்த. அயம் – இரும்பு. தாரு – மரம். சிலை – கல். செம்பாதி - பொன்தவிர்ந்த மற்றை உலோகங்கள் மேற் குறித்த ஐவருக்கும் தனித்தனி, இரும்பு – மனு. மரம் – மயன். துவஷ்டா - செம்பு என்பன. கல் – சிற்பி. பொன் –விஸ்வஜ்ஞன். என்று அடைவுபடுத்துக.

25. வைதிகருக் குள்ள மாதிரியாக இவர்கள் ஐவருக்கும் வேதம் ரிஷி கோத்திரம் சூத்திரம் முதலிய எல்லாம் தனித்தனி உண்டு. விஸ்வப் பிரம புராணத்தில் விபரங்காணலாம்.

26. சிகைநூல் – குடுமியும்பூணூலும். குற்றச் செற்றங்கள்–உயிர்க்குற்றமான பகைமைகள். தீக்ஷித்து ஒட்டும் – தீட்சை செய்து விலக்கும். செகத் குரு –உலககுரு.

28, இலெமூரியா – இப்போதுள்ள இந்து சமுத்திரப் பிரதேசம் முழுவதையு மடக்கியிருந்த பழைய நிலப் பிரதேசம். செய்தோரார்? வினு. நந்த.........இயக்கரார்? சேரர் .........களார்? இவையும் வினுக்கள் எவர் பிறருமன்றுல், இவரலா தெவருமன்றுல் என்பன விடைகள்

29. வருமுறை – எதிர்நிரனிறைமுறை. துவட்டா என்போர் இய்க்கர். மயன் என்போர் நாகர். மனு என்போர் நக்கர். எனச் சேர்க்க. நக்கர்– என்பது நடக்கர் –நடு+அக்கர். அக்கர் – கண்ணுள்ளவர். அதாவது நெற்றி நடுவிற் கண்உள்ளவர் என்ற காரணப்பெயர்ச் சுருக்கம். நிரலே-நிரனிறை ஒழுங்கில். மனு. –சோழர். மயன் - சேரர், துவஷ்டா பாண்டியர். ஈழப்பனவுறு ரட்டை மூன்று -ஈழத்திற்குச் சொல்லப் படும் ரட்டைகள் மூன்று. ராஜரட்டை, மாயரட்டை, ருகுணு ரட்டை. ஆள்நர்–ஆட்சி செய்தோர் விஜயன் வரவுக்கு முன்.

30. மேற்செய்யுள் தரும் உண்மைக்குப் பிரதேச ரீதியான ஒவ்வோரத் தாட்சி இச்செய்யுளில் உண்டு: பட்டவர்த்தனம் – புலப்பாடு.

31. துணியும் விஸ்வம் – துணிந்துரைக்கும் உலகம்.

34. பம்பி – நிறைந்து. பல்கி – அதிகரித்து. உம்பர் – தேவர். வம்பலர் – பகைவர். மறுக்கும் – கலக்கும்.

35. இம்பர் இங்கத்தைய வழக்கில் செப்பரண் என்ற பெயரே சோவரண் எனமாறிற்று அம்புலி வழக்கில். - உலகவழக்கில். உம்பரார் மேல்நாட்டார். சோப்பட்டம் - சோ (அரண்) உள்ள பட்டினம்.

36. கருதலர் - பகைவர், வெளவி - கவர்ந்து. உவருட்க - உவர்கள் அஞ்ச நீரால் - தன்மையால்

37. பொருவறு - ஒப்பற்ற. புலனுகர்வு - ஐம்புலவின்பம். பேதுறுத்தி - மயக்கி. பொறி - கோட்டை (ஆகுபெயர்). கழறல் - கூறல். கேட்டும் - கேட்டோம் (சரித்திரத்தில்)

38. ஆகச - ஆகாச. அநுமந்தத் துவசம் - அனுமான் கொடி. ஏகமாந் தமிழிராசதானி - தனிப்பெருந் தமிழர்தலை நகர். போகபூமி-சுவர்க்கம். பொற்பினது - அழகுள்ளது. அழைப்பதென்ன - அனுமான் கொடியாகியகையால் அழைப்பது போல்.

39. விசுவகர்ம நாடகம், மாந்தைப்பள்ளு - மாதோட்டம் பற்றியெழுந்த பிற்கால இலக்கியங்கள். பாளிநூல்கள் மகாவம்சம் சுலுவம்சம் முதலியன. மீக்கூறும் - உயர்வு தோற்றக் கூறும். தளம் - அத்திவாரம். தயங்குற - விளங்குற

41. அல்உறழ் - இருள்துண்டம் போலுள்ள. மல்லமாபுரம் - மாமல்லபுரம். மாந்தைக்கொடை - மாந்தைச் சிற்பபாரம் பரியத்தால் வழங்கப்பட்டவை

42. அத்திறம் - அப்பாங்கில். பத்தர் - பொன்வேலைகாரர், பஞ்சகம்மாளர் - இரும்பு வேலை ஆதியவற்றுக்குரிய ஐவகைக்கம்மாளர். கம்மாளர் கம் - தொழில். ஆளர் - ஆளுபவர்.

43. 44. கோயிலைச் சுற்றிமதிலும் அகழியும், நகரைச் சுற்றி அரணும் அகழியும் பற்றி அண்டபிண்டத் தொடர்புசார்பில் உள்ள அந்தரங்கம் ஒன்றைத் தெரிவிக்கிறது இச்செய்யுள். ஒருரில் ஒரு குலத்தில் இருந்தபோதும் எல்லா ஊருடனும் எல்லாக் குலத்துடனும் தொடர்புற்றுக் கொண்டே இருப்பதான உணர்வு நீங்கிகாதிருப்பது பண்டைத் தமிழ்ச் சான்றோர் பண்பு. யாதும் ஊரே யாவருங் கேளிர் என்ற புறநானூற்று மேற்கோளின் உண்மைப் பொருள் இதுவே. ஆன்மாவியாபகமானது. அதன் அறி விச்சை செயல்கள் எங்கும் வியாபித்தற்குரியவை. என்ற ஆன்மீகதத்துவ உண்மையின் அடிப்பாடாக உள்ளது இது.

அந்நோக்கில் வீடு, கோயில் 'நகர் அமைக்கும் போதும் பரந்து விரிந்த உலகஅமைப்பு நிலையைக்கருத்திற் கொண்டு சுருதி யுக்தி அநுபவங்களின்படி அறியப்படும் பேருலக மாதிரியில் அமைத்தல் தமிழர் பண்பாட்டு வழக்கமாயிற்று.

'அதன்படி அமைக்கும் வீடோ, கோயிலோ, நகரமோ, கருத்து வகையால் முழுஉலகம். அம்முழு உலகைச் சூழ்ந்திருப்பது சக்கரவாளகிரி. அதனைச் சூழ்ந்திருப்பது புறவாழிக்கடல். இவற்றுக் கிணங்க அதைச்சுற்றி ஒரு மதில், ஒரு அகழி என்ற இரண்டும் அவற்றின்

பாங்கில் அலமவன. மாதோட்ட நகரைச் சூழ்ந்து அமைந்த அரணும் அகழியும் பற்றிச் சொல்லுங் கட்டத்தில் இவ்வுண்மை இங்கு இடம் பெறுகிறது. இவ்வுண்மை விளக்கில் இச்செய்யுள் களுக்குப் பொருள் கொள்க.

ஒருசிறை – ஒரு ஒதுக்கு சற்று ஒருவிடா – சற்றும் நீங்கிக் கொள்ளாத. (கருத்து வகையால்) நோன்மை – பெருமை, அரிதின் – அருமையான முறையில். இலங்கிட – விளங்க. அறிந்திடப்படும் – சுருதியுத்தி அநுபவங்களாய் அறியப்பட்டுவரும். ஒக்கச்சூழ்சுவர் – முழுவதையும் ஒருமிக்கச் சூழ்ந்துள்ளசுவர். பாங்கில் – அத்தன்மைக்கேற்ப.

45. பேரரணம் - பெரிய கோட்டை. குண்டகழி – சூழிந்து ஆழ்ந்தஅகழி.

46. தன்னீர்மையினல் - தன்தன்மையில். தனித்தலைமாநகர் – தனிமாதலைநகர் – தனிப்பெருந்தலைநகர். மன்னீர்மை – அரச நகர் என்ற தன்மை முந்நீரகழி. – கடல்நீரகழி.

47. மண்கிழங்காண் கேழல் – மண்ணைத் தோண்டிக் கீழ்மட்டங்காண முயன்ற விஷ்ணுவாகிய பன்றி. கீழம் – 'அம்' சாரியை. நாழங்காண் கமலம் – தண்டோடுகூடும் தாமரை. நரகவாய்க்கரா – நரகமோ என்று அச்சந் தோற்றச் செய்யும் வாயுள்ள முதலை.

48. கைதை – தாழை. நீர்த்திரித் தலைக்கும் – நீரின்கண் திசைதிரித்து இழுத்தலைக்கும். கோட்டு மோட்டுக் கோட்சுறு - கொம்புள்ள பெரிய கொலைகாரச் சுறு.

49. நீர்க்குண்டாழி – நீராழிக்குண்டு. பிறிவற – இடையீடின்றி.

51. எப்படித்தோ அப்படித்தாய். அத்தேவர் – அம்மேலுலகத்துத் தேவர் தந்நிலை யிருந்துகாண– தம்நிலையிலிருந்தபடி அடியிலிருந்துமுடி வரைக் கிரமத்திற்காண. தலைகிழக்கிட்டு – தலை கீழாகஇட்டு. அதிசயம்: பூமியிலுள்ளார் அடிநின்று முடிவரை காணும் அதே கிரமத்தில் தேவலோகத்துள்ளாருங் காணவைத்தல்.

52. செவ்வியர் - நல்லோர். செகத்துறுப்பு – இருபகுதியாரும் உலகியற்கு அங்கங்கள். பவ்வியமாக – இருக்கவேண்டிய நன்முறையில். வைக – இருக்க

53. செய்யுள் – செய்யுளோசை. நூலாறுமடுப்ப – நூலின்கண் அமைய. பாவோசைபாய்வதால் நூல்மேன்மைபெறுவது போல் பாலாவி பாய்வதால் மாந்தை எழில் பெறும். ஏர்கொள் – எழில் கொள்ளும்.

55. நன்றறி கிரேக்கர் – நன்மையாவதை அறியவல்ல கிரேக்கர். வாழ்வாம் - வாழ்விடமாம்.

58. மாவியல் வளாகம் – பெரும்பரப்பு. மன்னுறுப்பு – அரச அங்கங்களுள் ஒன்முன. கோவியல் – தலைமையமைந்த. சாதுரங்கம் – நால்வகைச் சேனை. துன்றும் – நெருங்கும்.

59. உன்னமித்து – நிமிர்ந்து. உன்னம் - வடமொழி வினையடி. அதிலிருந் தானதமிழ் வினையெச்சம் இது.

60. கவரி – சாமரை. குரம் – குளம்பு. நிலங்கிளைக்கும் – நிலத்தைக் கிண்டும்

61. ஆர் – அச்சு. ஆழி – சக்கரம். வீக்கிப்பொருத்தி.

66. சமிஜ்ஞை – கண்ணசைவு கையசைவு முதலிய குறிப்புகள். சிட்சிப்பார் – பயிற்றுவார்.

67. கானச் சேவல் – காட்டுக்கோழி, மோத்தை – ஆட்டுக்கடா.

68. துகட்படலை – புழுதிமண்டலம்.

69. சக்கர வியூகம், கருடவியூகம் – போர் நிகழ்கையில் தேவைக்கேற்பச் சேனைவீர்களை வகுக்கும்முறைகள்.

73. தத்துவம் 36 இல் ஆக மேலுள்ள ஐந்தும் சுத்ததத்துவம். ஆகக் கீழுள்ள 24 உம் அசுத்த தத்துவம். இடையிலுள்ள ஏழும் சுத்தா சுத்த தத்துவம். சுத்த தத்துவத்தில் உலகுயிர்களைஇயக்கும் பிரேரக சக்திகள் தொழிற்படும். அப்பிரேரக ஆற்றல் அசுத்த தத்துவத்திற் செயற்படுதற்குச் சுத்தா சுத்த தத்துவம் ஏழும் இடைநிலைச் சாதன மாயமையும் அகநகரில் உருவாகும் ஆட்சியாணைகள்புறநகரிற்சென்று தொழிற்படுதற்கு இடைநகர் சாதன மாதலுக்கு அது உவமையாயிற்று, உய்த்திட – செலுத்துதற்கு

74. மடை – நீரோடத் திறந்து விடப்படும் தடைசாதனம். காவிதி, எட்டி என்பன அரசவிருதுப் பெயர்கள்.

77. கண்ணுளர் . தொழில்நுட்பக் காட்சி உடையோர். பழைகிடப்போர் – அகலாதிருப்போர்.

78. அநுகரிக்கும் – போலிநடை நடக்கும். மாந்தை என்றால் மகளிர் சந்தை எனும் நிலையை ஆக்கும்.

81. ஏண்பெறு – பெருமிதமடையும். மகிழ்மீக்கூரும் பாடலாடல் – மகிழ்வுமிகுதி காரணத்தால் மேற்கொள்ளும் பாடலாடல்.

82. அதிசயான்விதம் – அதிசயத்தை உள்ளிட்ட.

83. உராவுவீதி – அகன்றவீதி. மாடே- பக்கத்தில், துங்கம் – உயர்ச்சி

84. மதக் கைம்மா – மதயானை. ஆனை, குரங்கு, மஞ்ஞை, புரவி (குதிரை) நான்கிற்கும் பிளிறல், சீச்சு, அகவல், கனைப்பு நான்கும் நிரனிறை.

85. சூன்முதிர்ந்த – கர்ப்பம் முதிர்ந்த. நேரிழைநலாரின் – மங்கையரைப் போல. ஒல்கி – தளர்ந்து, தறை – தரை. தலைத்தலை – இடத்துக்கிடம்

86. பகடுகள் – எருதுகள். பழுவெலும்பிழக – பழுவெலும்பு நசிய. ஈர்க்கும் – இழுக்கும். வானத்து + அகடுபோழ் + கிரிகள் – ஆகாசத்தின் வயிற்றைத் துளைக்கும் மலைகள். துறுத்து – உட்செறித்து.

87. தெற்றும் – பின்னுப்படும். யவனர் – அரேபியர். முண்டம் – மொட்டந்தலை.

90. ஐம்பெருங்குழு–அரசனின் ஆலோசனைக்குழு. எண்பேராயம் – அரசரின் செயற்குழு. வம்பு அலர் மாலை – மணமுள்ள பூமாலை. செம்பொன் நற்றசும்பு – செம்பொன்னலான நல்லகுடம். தசும்பு – குடம்.

92. அநுரை – அநுராதபுரம். குவை – குவியல்.

93. வெண்சோதிகான்று –வெள்ளை ஒளிபரப்பி.

94. மைக்கார்க் குந்தளம் – கருமுகிலனையகூந்தல்.

95. நன்ஞ்கமாளிகை - நல்+நாக + மாளிகை – நல்ல தேவ லோக மென்ற மாளிகை. தன் ஆகமாக–தனக்கு இருதயமாக. தரணியாளும் மன்னுக–பூமியாளும் இராசா வாக. நாகநாதர் – திருக்கேதீச்சரத்தான்.

97. புகலிமன் – திருஞானசம்பந்தர். நம்பி – சுந்தரர்.

98. ஞாயில் – மதில்மேலமையும் ஒருறுப்பு. மதில் ஒன்றும் நால்வாயில்– மதிற்சுற்றிற் பொருந்தும் நால்வாயில்.

100. இருத்து விக்குகள்–வேள்விக்கிரியை யியற்றுவோர். கோலும்மந்திரம் – – சூழ விடும் மந்திரங்கள்.

101. சோ=ஹம் – ச: அஹம் – அவன்நான் என்ற பாவனை. சிவோஹம் பாவனை. ஆகம் – உடம்பு. அஃதாக-சோ=ஹம் என்றே ஆகுக. வேகம் உணர்வுவேகம்.

103. சத்தி தற்பர சித்தர் – வாமசமயத்துச் சந்நியாசிகளில் உயர்ந்தவர் சத்தியைமேலான பரமாகக் கண்டு சித்தியுற்றவர்கள். அத்தி யீருரி– யானையிலிருந்து உரித்த தோல். அதனைப் போர்த்துக் கொள்பவர் காளாமுகர்.

104. கோயில் வீதி கோயிற்சூழலைத் தனக்குள் காட்டக் கூடியதாகப் பளிங்குபோல் மெருகூட்டப்பட்ட கல்லால் அமைந்தது. இது நாக லோகத்தாரும் நேரெதிர் கண்டு கைகூப்பவைத்தற்கோ என்பது இச் செய்யுள்வர்ணனை. ஏலும் மூலிகையிட்டமுத்தி –பொருத்தமான மூலிகைகள் இட்டு அழுத்தி. முரட்டுக்கற்களைப் பளிங்கு போல் அழுந்தம் பெறச் செய்வதற்குப் பண்டைநாள் மூலிகைகள் சில உதவின என்பர்.

105. இச்செய்யுள் நாலடியினும் முதற்சீர் ஒன்றுயிருத்தல் மடக்கணியெனப்படும் அழகு. நான்கையும் பின்வருமாறு பகுத்துப் பொருள் கொள்க.

மாந்து+ஐவேறு புலன்கள்–குடிப்பது போன்று ஆவலாய் உள்வாங் கப்படும் ஐம்புல இன்பங்கள்.

மாழ்கி + ஏமாந்து + ஐ துன்ற – அவ்வின்பத்திலேயே மயங்கிக் காலம் போக்கி ஏமாந்து முதுமையில் மரணம் விளைக்கும் சிலேற்பனம் நெருங்கிய போது.

மரம்புகும் + ஆந்தை போல்நர் – பகலில் மரக்குழைக்குள் பதுங்கி விழிபிதுக்கும் ஆந்தையைப் போல் விழிபிதுக்கும் நிலையினரும்.
அண்ட – வந்து அண்டும் போது. மெய்வாழ்வுய்க்கும் மாந்தைக் கோயில் – அவர்களை மரணபயம் நீக்கி மெய்வாழ்வில் இடம் பெறச் செலுத்தும் மாதோட்டக் கோயில். மாந்துதல் – குடித்தல். ஐ - சிலேற்பனம். போல்நர் – போல்வார்.

106. ஐந்து பரு மடிப்பட்டுடுத்து – பஞ்ச கச்சம் கட்டி . புஞ்சகச்சம் – குருத்துவ உடை . அறுதொழில் : ஓதல் , ஓதுவித்தல் ; வேட்டல் ,வேட்பித்தல் ஈதல், ஏற்றல் என்பன.

108. அக்கினி ஹோத்ரம் – அந்தண ரில்லங்களில் இடம் பெறும் தினசரியாக வழிபாடு . உருவமை மந்த்ரம் . ஒரே மந்திரத்தை 100, 1000, என்ற வாறு பலதடவை உச்சரித்து அதன் ஒலியலைகள்பரக்குமாற்றை அவதானித்து வருதல் . அதன் மூலம் மந்திரசுத்தி வாய்க்கும் என்பர் கருமலி கலி – தீமை மிகுங்கலி .

அந்தணர் மானிகைகளில் வேத கோஷம் பற்றிக் கூறுகிறது இச்செய்யுள். வேதத்தை முறைப்படி உபாசிப்போர் அதை நான்கு வகையில் ஓதுவர். அவை, சங்கிதா பாடம், பதபாடம், சடாபாடம் கனபாடம் என்பன. நாலினும் பயிற்சி பெற்ற வர்கனபாடிகள் என்ற விருதுக் குரியர். அமர்ந்து கேட்டு – விரும்பிக் கேட்டு.

109. அக்ராஹாரம் – அந்தணர் குடியிருப்பு. அக்ர + அஹாரம் – முதல் வருணத்தார் வீடு, ஓர்சார் – ஒருபக்கம், பூண்தகும் நூல் – அணிகலமாகத் தகும் பூணூல். ஒவார் – நீங்கார்.

116. தௌர்யத்ரிகம் : தூர்யம் – துளையுள்ள வாத்தியம் . தௌர்யம்-அவ்வாத்திய இசை , தௌர்யத்திரிகம் அவ்வாத்திய இசையோடு இடம் பெறும் மூன்று . விசேட பூசையில் அர்ச்சனைமுடிவில் இந்த மூன்றும் பூசையோடு பூசையாக இடம் பெறுவன . இவை இச்செய்யுள் மூன்றுமடியில் நடன , கீத , வாத்ய வந்தனே என வருதல் காண்க . வந்தனை – வழிபாடு .

114. தத்வமெல்லாந் தோன்றிய மூலம் நாதம். தத்துவ மொவ்வொன்றினுந் தான் சம்பந்தப்பட்டிருப்பது நாதம். உலகத் தோற்ற முதலும் அது ஒடுங்கும் முடிவும் நாதம். இறைவனுருவும் நாதம். அவனை நாதமாய்க் கண்டடைதல் நாதயோகம் – எனில் நாதமின்றிப் பூசையமைதல் ஏங்ஙனம்? என அங்கலாய்க்கிற தொனிப்புள்ளது இச்செய்யுள்.

115. சுதிமணந்து – சுதிதோன்றி. சுவரங்கள்துன்றி ஸ ரி க ம ப த நி என்ற சுருதிகள் நிகழ்ந்து அவை மந்தகதியில் ஒலிக்குங் கட்டம் விளம்பகாலம் எனப்படும். அதன்கண் நிகழ்வது நடனம், எனில், அதன் மேல்விருத்தி நடன விருத்தியே யாதல் சொல்லாதே யமையும். பூசையில் நாதமியைக்கப்பெற்றதன் காரணம் இவ்வாற்றானும் அறியப்படும்.

118. மாளிகைப் பத்தி – உட்சுற்று மாளிகை வரிசை . குடமருள் – குடத்தையொத்த .

120. அத்தம் – அப்தம் – ஆண்டு . வைகாசிப் பூசம் முதல் விசாகம் முடிய விழாக்காலம் என்ற ஏற்பாடு துவஷ்டா மன்னன் வகுத்ததாகக் கொள்ளப்படும் . அநுஷமே தீர்த்த நாளாயிருந்ததாகச் சிலா சாசனங் கூறும் .

121. திகந்தம் – திக் + அந்தம் . திசை யெல்லை . உதுவாக் கண்டு – மேற்சொன்ன உவ்வண்ணமாயிருக்கக் கண்டு, இனி, பாலாவி வரவு காண்பாம்எனமுடிகிறது படலம்.

## பாலாவிப்படலம்

2. கனத்து–நீரணுச்செறிந்து தடித்து. உரறி–சினந்தொலித்து.கான்று-கக்கிச் சொரிந்து. கடுகும்-விரையும்-முடுகி–நெருக்கியடித்துக்கொண்டு, புனம்–சிறுபயிர்விளை தோட்டம்.பொன்மான் மேவும்-இது தேவநம்பியதீசன் சரித்தித்தொரு நிகழ்ச்சியாகவும் அமைந்துள்ளது.

3. நாறும்–பரிமளிக்கும்.அநுரை–அநுராதபுரம்.

4. திகழ்த லொன்றே–திகழ்தல்மாத்திரமா

5. குறைவறுப்பான்–குறைவைநீக்குமாறு.வறபம்-வரட்சி.

6. பநுவல்-பாடல்.

7. துயர் தப-துயர்கெட. மெய்ம்மை ஒதி-மெய்ஞ்ஞானம்.

8. நீரால்-தன்மையால்.மல்வத்த-பூந்தோட்டம்.அப்பெயர் ஆற்றுக்காயிற்று கடம்-காடு.

9. நீத்தம்-வெள்ளம். உயிலமென்னும் முதுகுளம்-முதியஉயிலங்குளம்.

12. வங்கம் - கப்பல். கம்மியர்--கம்மாளர் . வாக்கியலார்-- வாக்மிகள் . கா-சோலை.

13. வீந்தார்-இறந்தார். கயிலை–தென்கயிலை,மாதோட்டம். கடுக்கும்-ஒக்கும்

14. கிளக்கலாம்–சொல்லப்படலாம்.

15. நாபி தொப்பூழ்ச்சுழி,கூந்தல்–பாசி,இதழ் -கிடை (கிடைச்சி) கண்–கயல் (மீன்)

16. சூழ் ஆழித் தேரோன்–சூரியன்,ஆழி–சக்கரம், பாலாவிக்குப் பொருந்துமாறு சூரியன் பாலாவியாகிய தன்பால் என்றும் மாலுக்குப் பொருந்தச் சூரியன் பால் என்றுங்கொள்க. இதில் தன் சாரியை, கோளாளி–கொலைபுரியும் சிங்கம். ஆறு சிங்கத்தை இழுத்தலைக்கும். நரசிங்கமான மால் இரணியனை இழுத்தலைக்கும்.இதற்கேற்பக் கோளாளியாகி இரணியனை இழுத்தலைக்கும் என உரைக்க. வாழாழி–வாழும்கடல், வாழும் சக்கரம். ஆற்றுக்கும் மாலுக்கும் முறையே பொருந்தும். மா மருவல்; ஆற்றுக்கு விலங்குகள், மருவுதல்; மாலுக்கு இலக்குமி மருவுதல்.

17. வேதன்-–பிரமா. வாக்கியல் செல்வி–சரஸ்வதி. வேதனுக்கு; சரஸ்வதி அவனுடைய நாக்கில் இருத்தல், வேத நாதந் தோற்றுதல், உலகைப் படைத்தல். மிகுத்துச் சொல்லும் மார்பு விலாசம். ஆற்றுக்கு: சரஸ்வதி நாவால்(தான்)பாடப்படுதல் ஒலிகிளப்புதல்,பயிர் செடிகளை ஆக்குதல், அகலமான படுகையுடையதாதல் எனப் பொருந்துமாறு கொள்க.

18. திலதர்ப்பணம்–-எள்ளும் நீரும் இறைத்தல்.

19. பயபத்தியொழுக்கம்: ஆற்றுக் காகையில் நீரினது வரிசையொழுக்கம் பயம்–நீர். பத்தி–வரிசை. அரனடியாருக்காகையில் பயமும் பக்தியுங் கலந்த ஒழுக்கம் , பரனையாகப் போற்றல்: பாலாவியும் சிவனைப் போற்றப்படல். அரனடியாருஞ் சிவனைப் போற்றப்படல் உண்டு. பராபரன் அன்னபாலாவி, 'சென்றுடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே, ஆர்த்த பிறவித்துயர்கெட நாமார்த்தாடுந் தீர்த்தன்,என்பன காண்க

20· வான்தோயுங் குலப்பிறப்பு:சான்றோர்க்கு: மிக உயர் குலத்துப் பிறப்பு ஆற்றுக்கு ஆகாயத்தை முட்டும் மலைக்குலத்திலிருந்து தோன்றியபிறப்பு

21. அலகில – அளவற்றன. பவ்வியநிலைமை – செப்பநிலைமை.

22. ஓம்பி––பாதுகாத்து.

23. பரிபாகம்––மலபரிபாகம்.

26. விவித –– பலவித. தாமம் –– மாலை, நவ்விழி – நவ்வி விழி–மான்கண்.

27. வையாளி–வையாவெளி. கொய் ஆளும் உளைமா––கொய்து சீர்படுத்தப் படும் பிடர்மயிருள்ள குதிரை.

29. வயற்சேற்– – – காழி - சீர்காழிச் சிவமயப் பொலிவுக்கு ஒரு அறிகுறி. பாசுரம்––திருப்பாசுரம்.

30. ஆசை–திசை. காசை––காயா.மானும்–ஒக்கும்.

31. இடபமாசம்––வைகாசி.புடவி–பூமி.

32. நட்டபாடைப்பண்–சுந்தரர் பாடிய நத்தார்படை – - பதிகம். இனம் பற்றிச் சம்பந்தர் பாடிய நட்டராகப் பண்ணுங் கருதப்படும்.

4. பரிகரிக்கும்–விலக்கும். கடனுறு––தன்கடனைக் கொண்டிருக்கும்.

35. பௌராணிகச்சீர்–புராணவரலாற்றுபதேசச் சிறப்பு.

36. ஏண்–பெருமை. சேண்பயில் திரு–மேலுலகாகிய சிவலோகந் தன்னிற் பொருந்த இருக்கும் திரு.

37. படன சூக்தம்–சூக்தபடனம்- புருஷசூக்தம் படித்தல்,

38. தாரகப் பிரமம்–பிரணவம். கயா – கங்கைக்கரைப் புண்ணியதலம்.

31. பாலாசிமன்டி–கிரேக்கர் வாக்கில் ஒலிப் பிறழ்ச்சியால் மாறிய பாலாவி மாந்தை. வேலாழி – வேலா ஆழி - வேலா–கரை- ஆழி·கடல். கடற் கரையைஉடையது.

42. பேதுறும்–மயங்கும். போதம்–ஞானம்.

---

## பாயிரப்படலம்

1. திரு – கண்டோரால் விரும்பப்படும் தன்மை - நந்தும்––மேலோங்கும். நீரது–தன்மையது. நாமம்–புகழ்.

2. ஐய–வியக்கத்தக்க. விழைந்து––விரும்பி. செய்யநீர்மை –– செப்பமான தன்மை.

3. துன்ற–நிறைய.துய்ப்பார்–அநுபவிப்பவர்.எண்ணமர்–நினைவில் தங்கும்

4. தழங்கிட–அழகு மினுமினுக்க. நீவும்––மெழுகும்,கல்லியல்––கல்விலட்சணங்காணுங்கலை.வல்லுநர்–திறமையாளர்.

5. தட––விசாலமான.

6. ஔடதமூலி–மருந்துமூலி.குறடு-கட்டை. கார்–கருமை. நந்தும்–மணம் மிகுதியாயுள்ள. தக்கோலம்––ஒருவாசனைச்செடி.

7. வாணிகச் சாத்து-வணிகர்கூட்டம்.

9. என்னதோர்-எத்தகைய . பன்னும்-சொல்லப்பட்டுவரும் . முயங்குழி -நடந்து செல்கையில்.

10. ஏற்றெதிர்ப்படு-நெற் றி முட்டில் எதிர்ப்படும். கூற்றர்-யமன்கள். அன்னர்-அவர்கள்.துணுக்குற- அச்சமுற.

11. அட்டமாரருகு--அட்டமருகு. மண்டி-நெருங்கி. துரந்தன--துரத் தின

12. எஞ்சாது-மிஞ்சாது.இயன்று-அலைந்து.மஞ்சு-மேகம்.புஞ்சம்-தொகுதி

13. நனிமிக-வெகுஅதிகமாக.பனிபனித்து-வியர்த்து நடுங்கி,தகைந்த-தடுத்தன .

14. உர றி--கலக்கியுழக்கி.

15. பீதி-பயம்.

16. அட்டமூர்த்தி-சிவன்-பஞ்சபூதங்களும் சூரியன் சந்திரன் ஆன்மா என்ற மூன்றுமாக எட்டும் திரண்ட உருவ முள்ளவன் . இன்னல்-துன்பம் . மூட்டி-பொருத்தி.

17. பேதலித்து-மனம்வருந்தி. எணூஉ - எண்ணி.

18. விண்டது-பிளந்தது. அதலம்-கீழுலகுஏழில் ஒன் று . பாதலம்-பாதாளம்

19. விதிர்த்திட-நடுங்க.இரிந்த-புறங்கொடுக்தோடின.

20. பறிந்தென-விலகிப் போன மாதிரியாக. விட்ட வேட்கையர்--வேட்கையொழிந்தவர்.

21. குழீஇ -கூடி. தழீஇ - தழுவி.

24. கோஷ்டம்-அறை. சிதைவில் - சிதைவடைந்த இல். ஏர்மலிந்த-பெருமையாக எண்ணத்தக்க.

25. அசாவுயிர்த்து-இளைப்பாற்று மூச்சுவிட்டு.அப்பாங்கு-அந்தத்தன்மை.

27. உழப்பு - வருத்தம் , பருவரல் - துன்பம் .

28. சொப்பனம் - ஸ்வப்னம் - கனவு. அற்படும் - அல் படும் - இரவில் தோன்றும். ஏற்பட -எல் பட - ஒளி விரிய .

29. நாமம் - அச்சம் . ஏற்புறும் - வரவேற்கும் . நூற்படுமள்வை - நூற் பிரமாணம் . ஆன்ற - அமைந்த .

30. ஈட்டம் - கூட்டம் .

31. பம்பிசை -- பொங்கியெழும் இசை , பராவிசை - போற்றுமிசை வித்தகம் - ஆச்சரிய கரம் .

33. அம்பாரி - ஆனைமுதுகில் ஆள் இருத்தற்குரிய சிறுகேடகம் .

36. துணுக்குற - நடுங்குமாறு . உம்பரார் - தேவர் .

37. வாகு - வலிமை , புயம் , அழகு . துயிற் சுவைகொள் வாகு - துயிற் சுவை அனுபவிக்கும் அழகு . வாகுமிகு கும்பகன்னன் - புயவலிமை மிக்க கும்பகன்னன் .

38. நனவு – விழிப்புநிலே. விஸ்வசக்கு – எங்குங் காண்பவன். விஸ்வம் – எல்லாம் . சக்கு –– சக்ஷு – கண். நித்திரைத் தினவு – நித்திரைச் சோம்பர்.

44. ஊர் பசும்புற் பரப்பு – ஊர்ந்தசைவது போல் மினு மினுக்கும் பச்சைநிறக் குளுமையுள்ள பரப்பு.

45. வடிந்த – கூர்ந்த. வடி – கூர்மை. கூபம் – கிணறு.

46. துனி – துயரம், தண்ணீர்பாய் சுவடு – மழைநீர் வாரடித்தசுவடு.

47. நுணங்கும் - நுணுக்கமாகக் கொடி செடிகள் பின்னிக்கிடக்கும்.

48. கடவிடும் - செலுத்தும். எல்வை – சமயம்.

49. எண்கு - கரடி. வாடை கேட்டு – மணப்புப் பிடித்து. நாற்றங் கேட்டலும் தின்னநயப்பதோர் கூற்று என்புழிப்போல.

55. ஓதி - ஞானம்.

57. நலிவு - வருத்தம்.

59. கிலமுற்று. – அழிவுற்று. பதிகர் - வழிப்போக்கர்.

60. கேதம் – துன்பம்

62. பதுமம் - பத்மாசனம். தண்டு – யோகதண்டம்.

64. அகஸ்தியஸ்தாபனம் – திருக்கரசைக்கோயில்.

65. அருள் மாண்சித்தி – தவசித்தி.

67. செழியர் – பாண்டியர். நந்திய – விருத்தி யுற்ற. மறுக்கம் - கலக்கம்.

70. கேட்டுவந்தார் - கேட்டு+உவந்தார். கேட்டுவந்தார், என கேட்டுவா என்ற வினையடியில் தோன்றிய ஒருசொல்லாகவே கொண்டு கிரமமாகத் தொடர்ந்து கேட்டார் எனலுமாம்

## திருக்கைலாசப் படலம்

1. ஓத நீர்—அலையடிக்கும்நீர். பொற்பது—சிறப்புடையது.

2. இன்னும் மேன்மே லுயர்ந்து செல் அற்புதம்—ஊழிதோறூழி முற்றும் உயர் பொன்னெடித்தான்மலே என்ற தேவாரப்பொருள்.

3. கமை—க்ஷமை—பொறுமை . சிமயம்—சிகரம் . மிளிர்வதோர் சிகரம் — கயிலாயம்.

4. மானதண்டம்—அளவுகோல். 'பிருதிவ்யா:மானதண்ட இவ-காளிதாசன்

5. சத்துவ ஆற்றல்—உயிர்த்துவமான ஆற்றல்.

6. ஒஷதி—மருந்துத்தன்மையும் தெய்விகத் தன்மையும் வாய்ந்த மூலிகைகள்.

8. சுத்தசாதகர்–தத்வமசி மகாவாக்கியப்பொருளில் லயித்திருந்து சாதனை புரிவோர்.

9. ஒருக்கு காலர்-பிராணுயாமசாதனைவழியிற் பிரயோகிக்கப்படும் மூச்சுக் காற்றையுடையவர். ஒருக்கும்-கட்டுப்படுத்தப்பட்ட. கால்-காற்று,பிராணவாயு இருக்கு-மந்திரம்.

10. மாதிரம்-திசை.பாதிமாதர்-மாதொருபாகர். பசுபதிநாத், இமயச்சிவதலம். பாதிரிகாச்சிரமம் - பதரிகாசிரமம். இமயத்து விஷ்ணுதலம். பதரிகா-இலந்தை.

11. தரணிதரத்தன-மலையிடத்துள்ளன. தரணிதரம்-பூமியைத்தாங்குவது. மலை.

13. அவனி-பூமி. ஊட்டுகென்று-ஊட்டுக என்று. பிருது-உலகத் தோற்ற உபகாரிகளான ஆகிப்பிரமுகர்களிலொருவர். பூ- பூமி ஓவில்சீர் – நீங்காச் சிறப்பு. கவிதை—குமாரசம்பவம் 1ஆம்சர்க்கம் 2ஆம் சுலோகம்.

14. சங்கதம்-சமஸ்கிருதம். துங்கம்-உயர்ச்சி.விரவி-பொருந்தி.

15. திண்ணியவாக வேண்டி-நிலைபேறுடையனவாகவேண்டி.— பெரியபுராணம் திருமலைச்சிறப்புப் பார்க்க.

6. அட்டகாசம்-வெடிச்சிரிப்பு, ஒலியெழு சிரிப்பு. ஹர்ஷ சரிதம்பார்க்க. தவப்பசித்து-மிகப்பசித்து. உததி-கடல், சேய்அமுதால் சிவன் தரட்டும்:சேய் - உபமன்யு. தரட்டும்-கொடுக்கட்டும். பிரபுலிங்க லீலை பார்க்க.

21. இறுல்-தேன்கூடு. பொம்மல்-தொகுதி. வண்டர்-வண்டு.

22. சித்தர் – – – கின்னரர் – இசையாளராய தேவசாதியார். களி-மகிழ்ச்சி

23. மாநிலந்தரி-பூமியைத்தாங்கும். பணப்பத்தி-படநிரை.

24. மாதிர நாயகர்-திக்குப்பாலர். ஒதியால்-ஞானத்தினுல்.

25. ஏன்ற-இயன்ற-பொருந்திய.

27. பவனன்-வாயுதேவன் நே ருறீ இ-எதிர்ந்து, நுங்குவன்-விழுங்குவன்.

28. நின வீம்பு--உனது வீம்புகள். நீரர்-தன்மையர்.

29. இன்றவல மேவுனை – இன்றி அவலம் மேவும் உனை. தலைச்சுமை - பூபாரம், பூமிச்சுமை. வீம்பற்றுய்கெனு – வீம்பு + அற்று + உய்க + எனு (என்று)

30. வட்டித்து – வர்த்தித்து – விருத்தியுற்று. தேயு – அக்கினி. கேனம் கேனுபநிடதம்.

31. வறியை – ஆற்றலின்மை யாகிய வறுமை உடையாய். உறுசமர் வீரசாதனைக்குற்ற சமர். சமர் – போர். வெறுவிது - சாரமற்றது.

32. மற்று - அசை. உயிர்க்கும் – உயிர்பெற்றியலும். பொருதல் – போரிடல் மாறில் – ஒப்பற்ற. கொற்றம் – வெற்றி. கொச்சை – குற்றம். அரோ – அசை.

33. சந்நிதி விரோதம் - சிவன்முன்னிலைக் கௌரவத்துக்குப் பொருந்தாச் செயல். வெம்புபோர் – மனவெப்பத்தாலாகும் போர்.

34. பிணக்குறும் – முரண்படும். நத்தும் – மிகுந்த, உயர்ந்த. உய்த்து – பிடித்துத் தள்ளி. உரைத்தல் மேயினுன் • உரைத்தலைப் பொருந்தினுன் உரைப்பாணுயினுன்.

38. கொளீஇ - கொண்டு. பொரு அரும் - ஒப்பு அற்ற. பொள்ளென - விரைவாக. வாவி - தாவி.

39. குவவும் - குவிந்த, நிவவும் - நிமிர்ந்த. குவடு - சிகரம். திவவு - வலிமை

40. ஒருக்கி - ஒன்று கூட்டி. புவம் - புவர்லோகம். பூலோகத்தை அடுத்து மேல் உள்ளது. திவம் - தேவலோகம். பூழி - புழுதி. கவனம் - வேகம் கொட்பு - சுழற்சி.

41. வாயுவின் ஊழி - வாயு ஊழி. உலகஅழிவு நிலைகளில் ஒன்று, மண்ணுமிருக்காது நீருமிருக்காது நெருப்பு மிருக்காது வாயுமட்டுமாய் உலகம் இருக்கும் ஒருநிலை. பாய - பரந்த. சேய - தூரத்துள்ள நைந்திட - வருந்த,

42. படுமணிப்பணம் - மணிபடும்படம் - இரத்தினம் தோன்றும் படம்.

43. சுரலோகம் - தேவலோகம்.

44. தன்ன நோன்மைகள் - தன்னுடையனவான வலிமைத்திறங்கள். சேடழியும் - ஆற்றலழியும்.

45. சண்டவேகம் - கொடியவேகம். தவஇலகு - மிகஇலகு. திவம் - தேவலோகம்.

46. செற்றமுற்றது - பகைத்தது.

47. மாசறு புதுமை - நல்லபுதுமை. மாசறும் - குற்றமற்ற. ஆசு, மாசு ஒருபொருட் சொற்கள்.

48. காரணனாகி - நிமித்த காரணன் ஆகி. சமீரணன் - காற்று. வாரமார் - பயிற்சிகை வந்த. ஒப்பனை - அலங்காரம். நமது இருக்கையாதற்கு ஒத்த அலங்காரம். இயற்றுகென்றார். இயற்றுக + என்றார்.

50. நல் துப்புற - நல்ல வலிமை பொருந்த. ஒவாது - நீங்காமலே.

51. துப்புறழ் - துப்பு+உறழ். பவளமொத்த. துப்பு - பவளம்.

55. வம்பலர் கோதை - மணங்கமழும் மாலை.

56. அங்கமந்திரம் - வேதத்தின் அங்கமாகிய மந்திரங்கள்.

58. தத்தம துணைகள் - தம்தம் சோடிகள். மெய்க்கோலம் - திருக்கைலாசக் கோலம்.

59. ஆவிர்ப்பாவித்து - வெளிப்பட்டு.

## கேது பூசைசெய் படலம்

1. கற்பம் மிகப்பெருமளவினதான ஒரு காலப்பகுதி. மன்வந்தரம் அக்கற்பத்தின் ஒரு சிறு பகுதி. யுகம் அம்மன்வந்தரத்தின் ஒருபகுதி. 'சுவேதவராஹ கல்பே வைவஸ்வத மன்னந்தரே கலியுகே' என்று சங்கற்பவசனம் இருந்தல் பிரசித்தம். ஞாலம் - பூமி. மன்வந்தரம் - இருமனுக்களுக் கிடைப்பட்டது. ஏலும் - அமையும். ஏல்வை - பொழுது.

2. சயிலம் - மலை. கண்ணுயிரன் - இந்திரன், முனம்பயில - முன்அமைய. குழீஇ - கூடி. அயில் - கூர்மை.

3. அவலம் நீத்து – அமரத்துவம் பெற்று. அமரத்துவம் - இறவாதிருக்கும் தன்மை. கொளா - கொண்டு.

7. மா - இலக்குமி. ஆத்தர் - ஆப்தர் - உற்றுருறவினர்.

8. தவலருங் காவல் - இடையீடற்ற காவல். கருதலர் - பகைவர். மேவ வந்தது - வருதற் காரணம்.

9. திரணம் - துரும்பு. அரணம் - தஞ்சம். அளியோம் - இரங்கப்படத் தகுநிலையினேம்.

11. அந்தர் யாமி - உட்புகுந் நலவுபவன். வாக்கற்றுணர்துமோர் முன்னம் – சொல்லில்லாம லுணர்த்து மோர் குறிப்பு. முன்னுவான் – கருதுவான்.

12. சலிப்பற ஆழ்த்தி – அசையாது அழுந்தப் பண்ணி. பாகமெய்துவித்து – பரிபாகம் வருவித்து.

15. பயோததி - பய + உததி - பாற்கடல்.

17. உறவுக்கோல் - ஆன்மிக தெய்விக உறவாகிய மத்து. நிறீஇ - நிறுவி.

19. தீக்கான்றிட்டு – அனல்கக்கி. தாம்பார்த்து - தாம்பு + ஆர்த்து - கயிற்று வடத்தை இறுக்கியிழுத்து.

21. போன்ம் - போலும். திரயோதசித்திதி: இரி விபுதர் - கலைந்தோடுந் தேவர். கரயோகத்தண்டன் - கரத்தில் யோகதண்டத்தை யுடையவன் சிவன். கடை – வாயில்.

22. அந்நியம் - வேறுவழி. வன்னியன் - அக்கினிதாங்கியசிவன்.

23. மறுகி - கலங்கி. முஞ்சுறும் - சாகும். ஊசலிட. ஊஞ்சல் போலலைய ஓர் – ஒப்பற்ற.

24 ஆலாகலமதணுக்கத் தொண்டனே கைக்கொடு வருகென – அணுக்கத் தொண்டனே, ஆலகாலமாகிய அதைக்கைப்பற்றி வருக என. அணுக்கத் தொண்டனே என்பதில் ஐ - சாரியை. இது அண்மைவிளி. அது அசை. ஆலால்சுந்தர – ஆலாலசுந்தர.

25. காணூஉ - கண்டு. உடுபதி - சந்திரன். நக்ஷத்திரநாயகன். உடு - நக்ஷத்திரம்.

26. ஆதர் – கதியற்றோர். இவ்விதம் – கோமுகையைத்தாண்டாது திரும்பித் திரும்பி மும்முறை செய்யும் பிரதக்ஷிணம்.

27. வானவரோடு+உகந்து (விரும்பி) நசைஇ - இச்சையுற்று. குழும – நெருங்க. அது தவிர்த்திடுமா – அதைவிலக்குமுபாயத்தை.

30. விரகு – சாமர்த்தியம். ஆயபான்மையின் – தானவர் செய்து கொண்ட அத்தன்மையில். சிங்கிசூனு – சிங்கி என்பவளின் மகன். தேரான் – அறியாமல்.

32. மானமுற்று அது மாலுக்குச் சமிஞ்ஞையாற்காட்ட - அபிமானங் கொண்டு அதை மாயனுக்குக் குறிப்பால் அறிவிக்க. சட்டுவம் – அகப்பை.

33. முராரி – முர+அரி – முரன் என்ற அசுரனின் பகைவன். உட்டருஞ் செறிவுடலுயிர் – உள்தரும் செறிவு உடலுயிர் – உள்ளார்ந்த செறிவாகிய உடலுயிர்த் தொடர்பு.

34. உந்திடக் கிளர்ந்து – தள்ள மேலெழுந்து. அட்டமூர்த்தி – சிவன்.

35. கயிலைமண் வாசனை யளிக்கும் ஓதி – கயிலாயத்து மண்வாசனை யான ஞானம். சேதன உருக்களாய் – உயிர்ப்புள வடிவங்களாய்.

36. சைங்கிகன் – சிங்கிமகன். முண்டமாகியும் – முண்ட நிலையிலிருந்தே. அவற்குணின்றுணர்த்தும் – அவற்கு+உள்+நின்று+உணர்த்தும். எண் தகும் – கருதத்தகுந்த.

37. சேடு – பெருமை. அரவச்சிரம் – பாம்புத்தலை.

38. குண்டவியோக நாயகர் – குண்டலியோகத் தலைவர், கோளகை – வட்டவடிவான பீடம்.

40. நாக சேகரன் – நாகத்தைத் தலையணியாக உள்ளவன். நாகநாதனென்ருகிய காரணம் – நாகநாதன் எனப்பெயர் பெற்ற காரணம்.

41. அயில் ஐமுக்கருப் படை – கூர்ந்த அழகிய மூன்று கவர்கொண்ட சூலப்படை. பயில் ஐவேறு உளநியமம் – பயின்றுள்ள ஐவகையான நியமம், அவை சங்கற்பம், தாடனம், அகமர்ஷம், தர்ப்பணம், தானம் என்பன. எயிலைக் காய்ந்தவன் – முப்புர மெரித்தசிவன்.

43. மோகம் மேவிட முடுகும் – ஆசைமயக்கந் தோன்ற விரைந்து செல்லும். கையகப்படுத்தி – கைப்பிடியாய்ப்பிடித்து.

44. ஆகத் தொன்றும் – உடலிற் பொருந்தும். உன்மனுந்தம் - உன்மனுகலையின் விளிம்பு. ஆகமோக்தம் – ஆகம+உக்தம் – ஆகமத்திற் சொல்லப்பட்டவாறு.

45. கூவிக்கொண்டு வந்து – அழைத்துக் கொண்டுவந்து. உற்ற தோர் குறி - பூசைக்கு முன்னிலையாம் ஒன்று, அது பீடமோ, இலிங்கமோ, மூர்த்தியோ எதுவுமாகலாம். தாவிக்கும் – ஸ்தாபிக்கும். பிராசாதமந்திர நெறி – சுவாமி ஆவாஹனத்திற்குப் பிரத்தியேகமாகக் கையாளப் படும் மந்திரசாதனை நெறி.

> ஆவிக் கமலத்தின் அப்புறத் தின்புற
> மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
> கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
> தாவிக்கு மந்திரந் தாமறி யார்களே.

திருமந்திரம் 1842.

46. கூவிக் கொணர்ந்து குறியிற் சேர்த்தல் ஆவாஹனம். அதில் நிலைக்க வைத்தல் ஸ்தாபனம். பூசைமுடிபு வரை அங்கு தக்கிருக்க வேண்டுதல் மூலம் தடுத்துவைத்தல் சந்நிரோதனம். ஈது உனக்கு தேகம் – இந்தப் பீடமே உனக்குத் தேகமாவது. இங்கமர்க – இங்கு எழுந்தருள்க. ஏஹி அஸ்மானம் ஆவிவேஷ அஸ்மாபவது தேதநூ: எனல்காண்க.

48. ஈர்த்த மாமலர் – நனைந்த மலர்.

49. தலைமேற் சேர்த்த கையிரண்டையும் பலவாறு விரித்தும் சேர்த்துந் தொழுதல் பரந்து செலலும் மனவிரிவு சகஸ்ரதளத்திற் குவிந்தொருங்கச் செய்யும் செயற்குறியாம். காந்தண்மாமலர்க் கவினுற – காந்தள் மலரழகு தோன்ற, ''பூப்புரையஞ்சலி காந்தள் காட்ட''–திருவாசகம்.

50. அளி - கருணை. மின்னென...... ஒளி - சகஸ்ரதனத்திற் சிவனைப்பமைத்துக் காண்கையில் தர்சனமாகும் பொன்னொளி. ''எளியவாது செய்வார்'' .. ......என்றதிருமந்திரப் பொருளை விளக்குகிறது இச்செய்யுள்.

51, ஆதரம் பெருக – அன்பு பெருக. உத்வாசனவிதி – அழைத்தமர்த்திப் பூசிக்கப்பட்ட சுவாமியை அப்பொறுப்பிலிருந்து விலக வேண்டிக் கொள்ளுதல்.

54. கொண்ட கோலமே பொருள் - தோற்றியதோற்றம் போற்றி - என்பது காண்க.

56. ஞான காரகன் – ஞானங் கொடுப்பவன். பதம் – பதவி உபராகம் - கிரஹணம்.

59. இச்செய்யுள் கதாசிரியராய அகஸ்தியர் கேட்போராய பொதிகைத் தவசிகளை விளித்துக் கூறும் பாணியில் உள்ளது. போதமாதவம் ஞானந்தருந்தவம். ஓதினம் முனம் – முன்பு கூறியுளோம். (பாயிரப் படலம்) அதன் திறத்து - அவ்விஷயத்தில். இனுமொன்று – இன்னுமோர் குறிப்பு. அது அடுத்த செயயுளில் வரும்,

61. பதிட்டை - பிரதிஷ்டை, சோதிமான் – ஒளி விளக்கம் பெற்றவன்.

## துவஷ்டா பூசித்த படலம்

1. விசுவப் பேர்ப்பிரமம் – விஸ்வப்பிரமம்.விராட்பிரமமும் ஆம். வேறுவேருவும் வேறுவேறியற்கையும் நூறு நூறுயிரம் இயல்பினதாகி – – – – என்ற திருவாசகங்காண்க.

2. ஆரிடர் - இருஷி குலத்தர். சகளித்து – உருவுற்று. உற்பவித்து–தோற்றி பாலிக்க – வளர்க்க. நல்கும் – அருளும்.

4. ஆவ - ஆவன. அரணமேவு கோட்டை பாதுகாப்பாக அமையுங் கோட்டை. பெயர் நிறீஇ – புகழ் நிறுவி.

5. உருத்து இகல்புரி-கோபித்துப் போரிடும். அருத்தியால் – அவன்பிரியப்படி. இருக்கு+உரைத்திடும் - இருக்குவேதம் கூறும். 'துவஷ்டாவை அஸ்மா ஸ்வர்யம் வஜ்ரம் ததக்ஷ'. என்பது வேத வசனம். கிருத்திமம்–வஞ்சனை. கிரது – யாகம்.

8. பாங்கினுல் – முறைப்படி. ஆங்கு + யாம் + உற்று - அவ்விடம் யாம் அடைந்து.

9. சாதி, மாலதி, சம்பகம் – வாசமலர்த் தருக்கள்.

10. நாவினு மிரசமூர்ந்து உலவப் பண்ணு நீரது – நினைக்கவாயூறுந் தன்மையது.

11. வண்டினம் யாழ் செய் - ' வண்டுபண்செய்யும், தூஉய் - தூவி. அஃது - சோலேயே.

13. பவ்ய – நல்லியல்வாய்ந்த. செவ்வி – தருணம். அவர்களின் விசேட அன்பாசார ஒழுக்கத்தாற் கவரப்படுதலின் சீகண்டர் அவர்களனேயும் செவ்வி பார்த்திருப்பர். சவ்ய பாகுவும் நயனமும் – வலது தோளும் கண்ணும். (நன்னி மித்தம்)

14. கம்பிதம் – நடுக்கம். எண்டகும் – கருதத்தகும்.

15. சாமக்கிரி - உபகரணங்கள்.

16. போதயான நற்சூத்திரம் – போதாயன சூத்திரம். இது துவஷ்டாமரபுக் குரியது.

17. தருப்பணம் – நீராடிமுடிவில் சூரியகலேகளே நோக்கி நீரிறைத்தல்.

18. தேகமன்று – யான் இத்தேகமன்று. தேகி - தேகத்தின் வேருயது ஒன்று தேகத்தைத் தாங்கியிருப்பது. சிவனுெடொன்று பாவனே - சிவோஹம் பாவனே.

20. இடைகலே, பிங்கலே இரண்டும் சுவாசத்தோடு சம்பந்தமுற்ற நாடிகள் சுழுமுனேயுஞ் சேர்ந்து பிராணுயாமத்திற் சம்பந்தமுறும். ஏற்றி பிங்கலேவழிஉள் இழுத்து. இறக்கி – இடை (நாடி) வழி வெளியேற்றி சமநிலேப்படுத்தி – உச்சுவாசமும் நிச்சுவாசமும் [சமஅளவாயமைய் வைத்து தோற்று குண்டலி – மூலா தாரத்து மூண்டெழு குண்டலி. மேற்கொடு – சிரசை நோக்கி.

21. ஆதார சக்கரங்கள் ஆறு. உள்ளுடலிற் பிராணமயகோசத் தோடொட்டிஞற்போலுள்ளவை. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி ஆஞ்ஞை எனப்பெயர் பெறுபவை. குண்டலியின் ஆற்றலோடு மேல் நோக்கும் சீவசக்தி இவ்வாதாரங்களாறையுந் தாண்டிச் சிரசின் மேற்பகுதியையடையும். அப்பகுதி சுத்த நிலே பெற்ற ஆன்மாக்களுக்குச் சிதாகாய (ஞாஞகாச) வெளியாயமையும், அதன் மேற்பாகத்தில் சிவனது ஐந்து மூர்த்தங்களி லொன்முன ஈசானமூர்த்தம் உள்ளது. அதனேடு சீவசக்தி ஒன்றும் நிலேயே "சிவோஹம்" என்றநிலே.

2. சிவபூசையில் முதலில் இடம் பெறுவது ஆதாரசக்தி பூசை. அடுத்தது பூசிக்குமிலிங்கத்துக்குக் கற்பிக்கப்பட்ட ஆசனபூசை. ஆசனம் ஐந்து வகை. அதனுல் பஞ்சாசனம் எனப்படும். அவை முறையே கீழிருந்து மேலாக அநந்தாசனம், கூர்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என அமையும். ஆசனம் மூர்த்தி மூலம் என்ற பூசைக் கிரமத்தில் ஆசனபூசை முதலில் நிகழ்வது.

23. ஆவாஹனத்தின் முன்னும் யோகாசனபூசை ஒருமுறை செய்ய வேண்டிய்து விதி. இந்த ஆவாஹனவித்தை யோக நெறியிலேயே கை கூடுவதென்பதனுல் அது வேண்டப்படும். கும்பகத்தாற் குண்டலியனலே மூட்டி:– கும்பகம் – பிராணவாயுவை இடைபிங்கலே நாடிகளில் இயங்காமற்றடுத்து உள்ளே தேக்குதல். இதன் ஆற்றலிஞற் குண்டலினி மூண்டெழும் என்பது சிவயோக விளக்கம்.

24. பிராசாத மந்திர சாதனையாலேயே ஆவாஹனங்கைவரும். அம்மந்திர சாதனை பற்றிய விளக்கம் இச்செய்யுளில் உண்டு. குண்டலி தொழிற் படுகையில் மூலாதாரகமலத்திலிருக்கும் விநாயகர் பிரணவசக்தியை யெழுப்பிச் சுழுமுனை வழி மேற்செலுத்துவார். அச்செயற்பாட்டில் பிரணவம் பதினாறு கலைகளாகப் பிரிந்து தோன்றும். அவை மேதாகலை முதல் உன்மனை கலையீறாக அமையும். ஒவ்வோர் கலையையுங் கண்டு கண்டு பஞ்சாக்கரதியானத்தில் ஒன்றியொன்றி மேற் செலவைக்கும் விநாயகர் திருவருள். (விநாயகர் ஔவையரைத் துதிக்கையினா லெடுத்துக் கயிலாசத்தில் விட்ட செய்தி இவ்வுண்மையின் அடிப்பாடாகும்,)

25. இப்படி மேற் சென்றவர் பதினாறுங் கலையாகிய உன்மனைகலைக்கு மேல் பிரகாசிக்கும் பொன்மயமானசிவசோதியைக் கண்டு ஏலவே மலர்நிறைத்து வைத்திருக்கும் அஞ்சலிக்குள் அது புகுந்ததாகக் கண்டு கொண்டு அதைப்பேணமாகத் தாங்கி மெல்ல மெல்லக் கீழிறக்குவர்.

26. ஐந்தெழுந்துறைப்பின் ஒன்றி நின்றிறக்கி – ஐந்தெழுத் துச்சாரணத்தில் அழுந்தி நின்று கொண்டிறக்கி. ஆஞ்ஞை நேரே நிறுத்தி - நெற்றி நடுவிடத்துள்ள ஆஞ்ஞாசக்கரத்துக்கு நேர் நிறுத்தி. அநந்த – – – – துதித்து – அவ்விடத்தில் அது அளவற்ற சூரிய சோதியாகப் பிரகாசிக்கக்கண்டு துதித்து. இரேசகத்தால் – மூச்சை வெளியேற்றுதல் மூலம். அஞ்சலிக்குட் புகுந்தவா - சையிலுள்ள புஷ்பாஞ்சலிக் குட்புகுந்து கொண்டதாக உணர்வாற் கண்டு – மெய்யுணர்வுக காட்சியாற் கண்டு

27. இதய நேர் – இருதயத்து ஆஞ்ஞா சக்கரத்துக்கு நேராக. உருத்திர சோதி - இருதயத்தில் இலங்கும் சிவ சோதியின் பெயர். கதமுறும் – கத கத என்றிருக்கும். உரோம கூபம் - மயிர்சிலிர்த்தல். உள்ள மார்ந்து அமுதமுறு மினிமை – உள்ளத்துநிறைந்து அமுதமாகத் தித்திக்கும் இனிமை. ஆர்ந்தமுதமுறும் இனிமை – உள்ளம் நிறைந்த மகிழ் வினிமை எனலுமாம். முதம் – மகிழ்ச்சி.

28. போதபாவனை – ஞானபாவனை. தாத நீ யணைந்தாய் கொல் – அப்பனே வந்திருக்கிறாயா? இது உபசாரபூர்வமான ஒருவினா. வத்ச அணைந்தனம் - மகனே வந்துள்ளோம். இது அவ்வினாவுக்கு விடையாகப் பூசகர் கேட்டதாக உணர வேண்டியது. ஆவாஹனத்தின் மூலம் மூர்த்தியில் சுவாமி நேருக்குநேர் பிரசன்னமாயிருக்கக் கண்டு கொண்டு பூசை தொடங்கவேண்டும் என்பதை இவ்விபரங்குறிப்பிடுகிறது.

29. துடிதுடித்து – பதைப்போடு. சுவாகத அர்க்கியம் – நல்வரவு உபாசரமாக அளிக்கும் அர்க்கியம்

30. மூர்த்தியிற் சுவாமியை நேருக்குநேர் காணுமளவில் நேர்ந்த உணர்ச்சி விசேடத்தால் துவஷ்டாவிடம் ஏற்பட்ட மெய்ப்பாட்டுக் குறி விசேடங்கள் இச்செய்யுளில் வருகின்றன. மாலுற மறிக்கும் – •ஆசை பெருகவிரித்தகையைத் கவிழ்த்துப் பிடிக்கும். முஷ்டி சேர்க்கும் கட்டை விகள் மட்டும் நிமிர மற்றை விரல்களெல்லாம் மடக்கி முஷ்டியாகப் பிடிக்கும், அங்குஷ்டம் – கட்டைவிரல், நிமிர்த்திய கட்டை

விரல்களை மடக்கி மற்றைய விரலுட் செறிந்திடப் புகுத்தும். இவை யெல்லாம் துவஷ்டாவுக்கு அப்போது நேர்ந்த மகிழ்வின் மெய்விருத்திகள். மெய்விருத்தி - மெய்ப்பாடு. இவை வகையால் நாலு

31. பூஜாபத்ததியிற் குறித்த நால்வகைமெய்ப்பாட்டுக் குறிகளும் முத்திரைகள் எனவழங்கும். அவை முறையே ஆவாஹன முத்திரை, ஸ்தாபன முத்திரை, சந்நிதான முத்திரை, சந்நிரோதன முத்திரை என்பன. இந்நான்கின்பின் கொடுப்பது சோடிகாமுத்திரை. அஷ்டதிக்கும் - சுவாமிக்கு எட்டுத்திக்கிலும். சோடிகா - சுவாமியைச் சுற்றி எட்டுத் திக்கிலும் வலக்கைச் சுட்டுவிரல் பெருவிரல்களால் நொடித்து ஒலியெழுப்புதல், இது சுற்றுக்காவல் அமைக்கும் பாவனையாகும். இலிங்க புத்தி தவிர்ந்து - அது வெறுமனே இலிங்கம் என்ற அறிவற்று. சிவமே கண்டான் - அதைச் சாக்ஷாத் சிவம்என்றே கண்டான். (இதுவே பூசையில் முற்றும் முழுதும் எனல்சாலும்.)

32. மஞ்சள் வெண்பொடி - மஞ்சட்பொடியும் வெண்பொடியும்(அரிசிமா) மான்மதம் -கஸ்தூரி. கலவை - கூட்டு. தாபித்து - ஒவ்வொன்றையும் சுவாமியைஇருத்துவது போல் இருத்தி

33. அமிருதீ கரணம் பண்ணி - தனது திவ்வியநோக்கினுலும் தேனு முத்திரையினுலும் அவை அமிர்த்தமாகச் செய்து.

34. நீராட்டு முன் துவஷ்டா செய்த பிரார்த்தனை:- யோகசித்தர்க் கடுத்திடும் ஆஞ்ஞை மேவி - யோகசித்தர்களுக்கு அவர்கள் ஆஞ்ஞா சக்கரத்தில் வெளிப்பட்டிருந்து. அவர் மதிமண்டலத்தின் மடுத்திழி — அவர்களின் சிரோபாகமான சந்திரமண்டலத்திலிருந்து முட்டிவழிகின்ற அமுதவாரி மஞ்சனம் மகிழுமாபோல் - அமுதப் பெருக்கில் திருமஞ்சனங் கொண்டு மகிழுமாறு போல். அடுத்திடு மன்பிலேன் செய் அபிஷேகங் கொள்க - தகுதியான அன்பில்லாச் சிறியேன் செய்யும் அபிஷேகத்தையும் ஏற்றுக் கொள்க சுவாமி அபிஷேகம் நிகழ்வதின் யதார்த்த விளக்கம் இதுவாகும். இந்தப் பாவனையிலேயே நம்மவர் அபிஷேகம் நிகழ வேண்டுதல் சொல்ல வேண்டா.

35. பாடுசீர் - புலவர் பாடுதற்குத் தகுதியானசீர். சேடு - பெருமை. கோடு- கரை. கூடுபல் வாசம்-எனக்கியலுமளவு கூடுதலான பலகை வாசனைத் திரவியங்கள்.

36. உச்சிமேலெடுத்து-தனதுச்சிக்கு மேல் உயரத்தூக்கி அஞ்சலித் தெடுத்து

37. திருவொற்றுடை - மூர்த்தியின் ஈரமொற்றுந்துணி.

38. பளிதம் - பச்சைக் கற்பூரம். எட்டுவான் குணத்தன் - என்குணத்தான்

39. மகவு - பிள்ளை. மிகமகிழ்ந்து ஆலுங் காட்சி - மகிழ்ந்து பரிமளிக்குங் காட்சி. காங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க - கரங்கு. விவார் மகிழ்வின்சார்பில் சிவம் தான் மகிழும் என்க.

40. பூசையுறுப்பமை - பூசைக் கிரமத்தில் ஒரங்கமாகக்கொண்டு நிகழும்.

41. பூஜார்க்கியம்:- பூஜா+அர்க்கியம் - பூசைக்கான தகுதியுடைப் பொருள்கள் நைவேதியம் கொடுக்குமுன் விமலாசனம் அர்ச்சித்தற் குரியது என்ற விதிக்கிணங்க விமலாசனம் போற்றல் இங்கும் இடம் பெற்றுள்ளது.

42. துவஷ்டா தயாரித்த நைவேத்யத் தகுதியைத் தெரிவித்தல்:- முனை முரியா வெண் முத்தரி - முனை (மூக்கு) முரியாமல் நீட்டி யெடுத்த வேண்முத்துப் போன்ற அரிசி. முத்தரி – முத்துச்சம்பா எனலுமாம். ஆன்பால் முட்டுமுலை – பசுப்பாலே நிறைத்து வைத்து உலை. கைவினை நல மெய்துற வேவித்து - கைத்தொழில் வன்மையால் வேகவைத்து. மருவுஞ்சரு – நைவேத்ய மமைத்த சருவம்.

43. தட்டொன்று இட்டு ஆர அங்கு அஸ்திரமொடு நீர் தூய் - தட்டை இட்டு அமைவாக அத்தட்டில் அஸ்திராய படு என்று நீர் தெளித்து. வாசனை - - - வகை தேர்ந்து - படைக்கையில் நைவேத்திய அமுதிலிருந் தெழும் நறுமணப்புகை மேற்கிளம்பிச் சூழ்ந்து பெருமானுக்கு இத மூட்டும் வகையைத் தெரிந்து. சுலாவி - சுற்றி வளைந்து. இருந்து படைத்தனன் - பொறுதியாய் ஆராய்வாய்ப் படைத்தான்,

44 மது மதுரித்து - தேனுக இனித்து. பதமேவுங் கதலி - சிவனடியார் உள்ளத்தன்மை பொருந்தப் பழுத்துக் கனிந்து பதமான வாழைப் பழம். வருக்கை – பலா, நேரேகடவுள் காத்தியமா உதவிடுமாறு- நேரே கடவுள் உணவாக உதவுமாறு. உரித்தல் வாழைக் கனிக்கும் கண்டித்தல் (துண்டுபண்ணுதல்) மாவுக்கும் முறையே பொருந்தும்.

47. பண்ணியம் – பலகாரம். ஹம்சமுத்திரை பெருவிரற் கெதிர் அடுத்த இருவிரல் சேரக் கையைக் கவிழ்த்த நோக்கிற் பிடிப்பது. உன்முக ஹம்சமுத்திரை - அவ்வாற்றில் கையை நிமிர்த்திப் பிடிப்பது.

48. துவஷ்டாவின் நைவேத்யப் பிரார்த்தனை:- பவ்வியமுறை - நேர்த்தி யான அமுதமைக்கும் முறை. பசுத்துவம் தவிர்ந்து – ஆன்ம தோஷ மாய் நான் எனதெனும் வகையிலுள்ள பசுபோதம் நீங்கி. செவ்விய னுக நேர்ந்தனன் – ஞானப் பேற்றுச் செம்மையுடையவனுதற் பொரு ட்டு நேர்த்தி செய்தேன். அவ்விய மில்லான் – அழுக்கற்ற நெஞ்சினன். அன்ன சூத்தம் படித்தூட்டும் "அஹம் அன்னம்; அன்னுதோ ஹம்,- - - -எனப் பாடிப் பாடி ஊட்டும்.

49. அஹம் பாவம் – நான் என்னுந்தன்மை. திருவமுதூட்டுதல் எதுவரை யமெனின், பின்வரும் இரு நிலைமையும் நேரும் வரை என்க. ஒன்று ஊட்டுபவனுகிய தான் களிறுண்விளாங்கனி போல் அஹம்பாவந்தீர் ந்து வெறுமையாதல். மற்றது உவந்தனங் கோடி – 'திருப்தி, இனி எடுத்துக்கொள்" என்று சுவாமி சொல்லக் கேட்கும் உணர்வு எழுதல் கோடி – கொள்ளுதி. மலர்வா யலச – திருவாய் பூச.

50. அன்னவூண் சிரம மஞ்சி – அன்னக்களை – உண்டகளைச் சிரமம் சுவாமி' கிருக்குமென்ற எண்ணத்தால் அஞ்சி. வெண் தாலவிருந்த சேவை - விசிறியசைத்தல். தால விருந்தம் – விசிறி. பனையோலையினியன்றது. தாலம் – பனை.

51. ஏவரும் - எவரும். பழுநிய பழமை – முதிர்ந்த பழமை.

52. அஷ்டோத்தரசதம் - 108 மந்திரம். இங்கிதம் - உணர்ச்சி மெய்ப்பாட் டின்பம்.

53. சாம கண்டன் – ச்யாமகண்டன், நீல கண்டன். நாமருமணி - நாவில் மருவும் அணி. நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

54. துவஷ்டா பஞ்சாக்கர செபஞ்செய்த வாற்றை வர்ணிக்கின்றது இச்செய்யுள். முன்னுறு-தன்பூசனைக்கு முன்னிலையாயிருந்த. சீகண்டேசனை.இதய மோனநற் குகையினு ளொடுக்கி - மோன நிலையில் இதய குகைக்குள் ஒடுக்கிவைத்துக் கொண்டு. ஆஞ்ஞை தன்னையே நோக்கப் பார்வையை ஒருக்கி - இருவிழிப்பார்வையும் ஒருங்கு ஆஞ்ஞையில் லயிக்கக் கூடிய வகையில் ஒன்றுபடச் செலுத்தி. மனோலயம் வரத்தி - மனோலயம் வருவித்து. மருவுறு பரையெனு மொளியை உன்னி - பராசக்தியாகிய நின்மல ஒளியை நினைந்து. உள்ளுருகி - உள்ளமுருகி. உபாம்சுவாம் பான்மையுறச் செபித்து-உச்சரியாமல் உச்சரிக்கும் முறையிற் செபித்து. உணர்வுடனெழுந்தான் - உணர்வுப் பரிமளிப்போ டெழுந்தான்.

55. பூசை நிறைவான பிரதக்ஷிணம் நமஸ்காரம்பற்றி உரைக்கின்றது இச்செய்யுள். உராவு நெய்க்குடம் - அசைந்தாடு மியல்பினதான நெய்க்குடம். மனம் சிரத்தொன்ற – மனம் உச்சித்தானமாகிய சகஸ்ரதளத்தே லயித்திருக்க. க்ஷமார்ப்பணம் – அவ்வளவு நேரஞ் சுவாமியைச் சிரமப் படுத்தியமைக்குப் பொறுதி வேண்டிச் செய்யும் அர்ப்பணம். அது நன்றிக்கடனுதல் அமையும். உத்வாசனம் – ஆவாஹித்து மூர்த்தியில் தடுத்து வைத்த சுவாமியை, இனி தன்னிஷ்டமாகச் செல்ல வேண்டிக்கொள்ளும் பாங்கில் நிகழ்வது.

57. துவஷ்டாவின் உருப்பொலிவுரைக்கிறது இச்செய்யுள். சிகை – குடுமி வெண்ணிற்றுப் புண்டரம் – திருநீற்றுக் குறி. முப்புரிநூல் – பூணுநூல். பிரஹ்ம தேஜஸ் – பிரமத்தை உபாசித்தல் மூலம் உடலிற் பிரகாசிக்கும் ஒரு புதுவகையழகு. ஏர் பிறங்கிட - எழுச்சியாகத் தோன்றி விளங்க. இராப்பகல்செய – தன் மேனியொளியால் இரவும் பகலாகத் தோன்ற.

59. ஒருவா நேயம் - நீங்கா அன்புணர்வு. விதிர்ப்பு - நடுக்கம். வசமற்று – தன்வசமிழந்து. அயர்வான் சென்றொடுங்குணர்வு விழிப்புற - அயர்ந்து கிடக்கும் அவனது ஒடுங்கும் உணர்வில் விழிப்புத் தோன்ற.

60. முழுதுவந்தனம் – முழுவதாகக் கண்டு மகிழ்ந்தோம். வாழிய - - - வேண்டும் – அறநெறிதழைத்தல், உயிர்வாழ்வில் ஒளி மலர்தல் சைவம் வளமுறல் என்பவற்றின் சார்ப்பில் நீ வேண்டக்கருதும்.

61. அது திருவுளமறியும் – வேண்டத் தக்க தறிவோய் நீ.

62. 'தீது நன்றறியேன் திருவருளறிவிப் பதற் கப்பால் யாதும் ஒன்றறியேன்'- 'வேண்டிநீயா தருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்'. 'ஆயக்கடவேன் நானேதான்'.

63. போதம் பில்கும் உளப் பொறுதிக்கு நயந்து – ஞானம் பிழிந்தூற்றிக் கொண்டிருக்கும் உள்ளப்பொறுதியைக் கண்டு நயந்து.

64. பார் மீக்கூறு சீர்நலம் – உலகம் மேம்பாடாகப் போற்றத்தக்க சிறப்புகள்.

66. கரந்தான் – மறைந்தான். மேன்மைகட்கு அருகன் – மேன்மைகட்காம் தகுதியுடையவன்.

29. மௌலி — முடி உவாப்பிடர் — யானை எருத்தம். தரு அலர் — கற்பகதரு மலர்.

31. உதயசைலம் — உதயகிரி. சிங்க ஏற்று இயைபின் ஆர் பேர் — சிங்க உருவங்கள் தலையாற்றுங்குதல் தொடர்பாக அமைந்த பேர்.

33. வடிகெழு கொற்றவாள் — கூர்மை பொருந்திய வெற்றிவாள்.

35. பரிசனந்தம் — பரிசு + அனந்தம்.

36. மனக்கினியான் — காதலன். செனக்களிற்றுன் — சேனக்களிற்றுன் விஷ்ணு. சேனம் — ச்யேனம் — கருடன், களிற்றுன் என்பதில் களிறு ஊர்தி எனுமளவில் நின்றது. அனக்களிற்றுன் — அன்னக்களிற்றுன் பிரமா.

37. கட்டணல் கடுக்கும் — கண் தணல் கடுக்கும் — கண் அக்கினித் தழலையொக்கும். கந்துகம் — குதிரை. மட்டணவிடு — மட்டு + அணவிடு தேன் பொருந்தும். உட்டணவாத மெய்ம்மை — உள்ளத்தில் நீங்காத மெய்ம்மை, தணவாத - நீங்காத,

38. காளம் – எக்காளம்,

41. பின்மை முன்மை – பிற்காலம் முற்காலம், நீடுவாழ்வனைத்தும் யானையிலூர்ந்து வந்தாலொத்த இன்பம், சேடு – பெருமை, எந்திரப்பாவை யந்திரப்பாவை. யந்திர விசிறி – மின்விசிறி.

44. தலைத்தலை – இடத்துக்கிடம். அலைத்தகைம்மா – அசைக்கும் கையுள்ள யானை. தனிக மாக்கள் - செட்டி மக்கள்,

45. யதாஸ்தானம் – அமர்விடம்.

46. சூட்சி நற்றுணை – ஆராய்ச்சித் துணை. காட்சியாளர் – ஞானக் காட்சியுளோர்.

47. எண்ணுயம் – எண்பேராயம். உசாஅய் – விசாரித்து.

48. பூட்கை – மேற்கோள். பூட்கையால் மநுநீதி விளக்கினன்.

50. பவ்வஞ் சூழுலகு – கடல் சூழ்ந்த உலகு.

52. தீதோட்டும் நெறி – தீமையற்ற வழி,

55. மரு துதையும் – மணம் நெருங்கும்.

56. வன்பு + ஆழ – வன்முறைகள் அமிழ.

57. ஆவினத்துக்கு - பசுக்களுக்கு. அஹன்யா – தாக்கப்படக் கூடாதவை. ஆணைவலு – சட்டவலு. முதியகோ இவன் – பண்டை அரசன் இவன் மாதோட்டத்திற் பசுக்கொலை மாபாதகம் என்ற நிலை விளங்க வைத்தது இவனது ஆணை வலுவே.

58. ஈழ மன்னர் தாமாதரித் தெழுதும் என்பதற்கு மாத்தறை, அநுராதபுரக் கல் வெட்டுக்கள் அத்தாட்சியாம்.
'இசாமி சம்வதாரு புண மஹா வொற்றியோ எல மறுவா கல பாவம் கத்தாக' – இந்த விதிகளை மீறுவோர் மாதோட்டத்திற் பசுவைக் கொன்றபாவத்தைஅடைவார்.

இது தப்புளு மன்னனின் கதிர்காமக் கல்வெட்டு- எனப்படும். சிங்களக் கல்வெட்டாதலின் 'மாவொற்றியோ' என்று மாதோட்டம் பெயர் பெற்றிருக்கிறது நாலாம் மகிந்தனின் அனுராதபுரச் சிலா சாசனம் ஒன்றும் இதே பாணியில் உளதாம். அதில், பசுவினிடத்தை ஆடு வகித்துளதாம்.

## மண்டோதரி பேரருள் பெற்ற படலம்

1. என்குநர் – என்பர். இதிகாசர் – இதிகாசநூலார்.

2. அயன் மகன் மகன் மகன்:–அயன் – விராட்பிரமம். மகன் மகன் மகன் – பீட்டன்.

4. மாகநாடு – சுவர்க்கம்.

5. வாகு – அழகு

6. சூளிகை – மாளிகையின் முன்னுறுப்பு.

7. சூரியன் வாள் – சூரியன் ஒளி. பிரித்து – அதிலுள்ள மின் சத்தைப் பிரித்து.

8. இந்திரப்பிரஸ்தம் – தற்போது டில்லி இருக்குமிடத்தில் அக்காலம் பாண்டவர்க்கென அமைந்தநகர்.

9. தொட்டாவென – துவஷ்டாவைப் போல. உலகமாமகிபர் – பிரசித்தி பெற்ற உலக மன்னர். மகி – பூமி. மகிபர் பூமியைத்தாங்குவோர்.

10. தனதன் – குபேரன் – தனங்கொடுப்பவன். வரமகன் – வரம் பெற்றவன் – மேலானவன்.

12. மழப்பருவம் – குழந்தைப் பருவம்.

13. குழல் – புல்லாங்குழல் (இசை)

14. மண்டும் – நிறையும். வண்டலாட்டு – மண்வீடமைக்கும் விளையாட்டு. உண்டலாட்டு – விளையாட்டுக்காக உண்ணல்.

15. மாதுபாகர் – மாதைப் பாகமாகக் கொண்டவர். மேதை – அறிவு விலாசம்.

16. உருந்த - – ஓங்கும் – உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து. ஒருத்தர் –ஒப்பற்றசிவன். அருத்தி – விருப்பம்.

17. ஓர்ந்தறி அறிவன் – உணர்ந்தறியும் அறிவாளன். ஓவல் - நீங்குதல்.

18. போதம்மேவ – ஞானம்பெற.

20. குறி – இலிங்கம். அர்க்கியம் – பூசைத்திரவியங்கள். திவ்வியார்க்யம்– தெய்வத்தன்மையாக்கப் பெற்ற பூசைத் திரவியங்கள்.

21. சாண்டில்ய வித்தை – இறைவனை இருதயத்தி லிருத்தித் தியானிக்கும் ஒருவகை வித்தை, சாண்டில்யர் என்ற முனிவராற் பெயர் பெற்றது. ஒற்றிநின்று – அரவணைத்து நின்று.

22. கடயோகம் – உடம்பை வசப்படுத்தல் மூலம் மனத்தை வசப்படுத்தும் முயற்சி. கடம் – ஹடம் – தேகம். ஜாலந்திர யோகம் – நாநுனியை வளைத்து உள்நாக்குக் குழியை யடைக்கும் ஒரு வித்தை.

23. எண்டக – எண் + தக – மனஇசைவுக் கேற்ப. வாமம் – சாக்தம் வேட்கை – விருப்பம்.

24. துரீஇ – துருவி, ஊடுருவி. இவ்வித்... –ஒளித்தும்: இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க் கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும், நக்கிருக்கும் – நக்கு + இருக்கும். நக்கு – சிரித்து. 'நக்கு நிற்பன் அவர் தமை நாணியே'.

25. ஆதரித்து – விரும்பி. ஆதரித்தழைத்தல் – ஆவாஹனம். அருண்முகப் படுத்தல் – சந்நிதானம். சுவாகதார்க்கியம்–சுவாத + அர்க்கியம், நல்வரவைப் போற்றும் பாங்கான அர்க்கியம். அதாவது மூர்த்தியின் முடியில் இடும் சிறுதிவலை.

26. விஞம் – வினவும். இகுளையர் – தோழியர்.

27. நிர் ஹேதுக கருணை – காரணங் கருதா தெழுங் கருணை. கேதுநாதன் – கேதீஸ்வரன். மாதுபூஷனி – பெண்களுக்கு அருங்கல மானவள்.

28. இனிமை அருத்தி – இனிமையூட்டி. உவாமதி – பூரணைச் சந்திரன். ஓதம் – கடற் பெருக்கு. மலைந்தாள் – திகைத்தாள்.

29. மதுகை – இன்பியலநுபவம்.

30. நைகரம் – தளருந்தன்மை.

32. ததாஸ்து – ததா அஸ்து – அவ்வாறே யாகுக. உருக்கரந்தான் – உருவை மறைத்தான்.

34. உசாவல் – விசாரித்தல்.

36. நேரலர் – பகைவர்.

37, தசப்பொருத்தம் – நக்ஷத்திரப் பொருத்தம் முதலிய பத்துவகைப் பொருத்தம். கோத்ர சூத்ரம் – கோத்திரமும் சூத்திரமும். கோத்திரம் – குலமரபு. சூத்திரம் – வைதிகத்தில் வெவ்வேறு மரபினர்க்கு வெவ்வேறு விதிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை ஆசார விதிமுறைகளடங்கிய ஸ்மிருதி.

38. பராவரும் – பராவு அரும் – சொல்தற்கரிய.

40. பவ்வியம் – இதமான நன்முறை, அநுஜ்ஞை – அநுமதி.

42. தோன்று துய்த்தான் – தோன்று வண்ணம் நடந்து கொண்டான்.

43. அற்பொலி – அல் பொலி – இருள்மிகும்.

45. இகழுநர்க் கெதிர் ஏறுக நிகழ்நடை – இகழ்வார்முன் ஏறுபோற் பீடுநடை,

47. தணந்து – விட்டு நீங்கி.

48. புணர்ப்பு. – மாயம்.

49. உள நிறை – உள்ளக் கோட்பாடு.

50. பைதல் – துன்பம்.

52. உக்கழி கருத்து – அஞ்சி அழியும் கருத்து. உக்கு – உட்கு – அச்சம்.

53. நவ்வி – மான். ஞாதியர் – சுற்றத்தார்.

54. அரங்கு – நாடகமேடை. அது இங்கே செய்தி நிகழ்ந்த இடம்.

55. இயம்பியது – சொல்லியதை, உளங் கொளுமுனம் – இராவணன் கருத்திற் கொள்வதற் கிடையில், குழக்கன்று – இளங்கன்று. புனிற்று – ஈன்றண்ணிய நாளைய பசு.

56. அந்தரங்கத்துவம் – இரகசியம். தன் பெரும் நிறை – மண்டோதரியாகிய தனது தெய்வஞ் சார்ந்த கற்பு.

57. ஈசி – ஈசன் மனைவி, அர்த்த நாரீசர் – அம்மையப்பர்.

59. கிறீத்தாப்தம் – கிறீஸ்தவ ஆண்டு. அப்தம் ஆண்டு சதாப்தம் நூற்றாண்டு.-சதம் – நூறு.

61 பிரஜ்ஞை – உணர்வு வெளிப்பு.

---

௳

## மாந்தை விகாசப் படலம்

1. பௌவ வளாகம் – கடல் வளாகம், நத்து - சங்கு.

2. நூதனம் – புதுமை, புர்ாதனம் - பழைமை, நோன்மை – பெருமை.

3. குலவும் - விளங்கும், பிறக்கம் – புலப்பாடு.

4. தொக்கிருந்து - கூடியிருந்து, தக்கிணமார்கைலாசம் - தக்ஷிணகைலாசம்

5. பார்சுலவும் – உலகஞ் சுற்றும், பழவுலக யாத்திரிகர் : பிளினி ரொலமி, கியூன்சாங், பாஹியன் முதலானோர்.

8. பொறியாய்த்து – பொறியாயிற்று.

9. உள்ளாடும் உரு – உள் அகன்ற உரு, தள்ளாடி – ஊர்ப்பெயருமாம். நீர் தேங்கியலைதலுமாம். மூலிகை மணந்து – தள்ளாடிப் பிரதேசத்திலுள்ளமருந்து மூலிகைச் சத்தெல்லாம் கலந்து, மணந்து – மணமும் தன்னிற் சுவறப் பெற்று, வெள்ளாடும் – வெள் – வெண்மை ஆடும் – ஒளிரும், நாவலூராளி – சுந்தரமூர்த்திநாயனார்.

11. இந்தவொரு தலம் பிரியார் – 'கேழல்வெண்மருப் பணிந்த நீள்மார்பர்கே தீச்சரம் பிரியாரே'.

12. கெழுமும் – பொருந்தும்.

14. இகம் – இவ்வுலகம், பன்னகம் – பாம்பு, பன்னக மருவுமி தலைக் கோலம் - பாம்பின் படம் போன்ற ஒரு அமைப்புள்ள தலையணி.

15. ஒருபாலா – ஒருபாலாக, ஒருபுறமிருக்க.

16. யவனம் – அரேபியா.

17. மற்றவர் – முற்செய்யுளிற் காணும் வாசநறுங்குழலார், அகத்திணை – காதலொழுக்கம் பாடுங் கவிதை, அடுப்பன – பொருந்துவன, எடுப்பு – உயர்வு.

18. எண்தொகை - எட்டுத்தொகை என்ற சங்க இலக்கிய நூற்றெகுதி.

19. புல்லரிக்க-சிலிர்க்க, மதுமதுப்போன்று-தேன் சுவையினிமை போன்று, சதுர் – திறமை.

20. அறியாதொன்று – அறியாத ஒன்று, ஏகபோகம் – தனியுரிமை.

21. ஊகங் கொண்டு – மதி யூகத்தின் மூலம், இதனை – மாந்தை மாதோட்டத்து மாந்தையே என்பதை. பெருந்தோட்ட மன்னர் ஆர்ப்பிசை வெரூஉங் குட்டுவன் மாந்தை – குறுந்தொகை, பெருந்தோட்டம் – மாதோட்டம், மாமூகராக்கும் – தீர ஊமையராக்கிவிடும்.

22. 'புன்னைகச் – – – மாந்தை – – –' ஒரு தனிப்பாடல்.

23. மன் – மன்னன், மரூஉம் – மருவும்: பொருந்தும், மட்டு மாகாத்ம்யம் – மட்டக்களப்பு மான்மியம்.

24. செரன்றிப் – சேரன்தீவு என்ற சொல் சொற் சோர்வுற்று பெற்ற வடிவம், நிரன்று – நிறைந்து, விற்கொடி நிலைத்தமை - சேரன்கொடி நிலைத்தமை என்றது சேரன் ராஜதானியாயிருந்தமையை. நிதர்சனம் – சாட்சி, கண்ட சாட்சி.

25. போகணும் – போகவேணும், ஒகை - உவகை உயர்வு, அளித்தது – பாதுகாத்தது, ஆண்டது.

26. கண்ணுளர் - விசுவகன்மர். வகுப்பொழிய – விதித்தது ஒழிய, இக்கருத்துக் கொண்ட பாடலும் ஒரு தனிப்பாடல்.

27. ரோம் பிளினி - உரோம் நாட்டுப் பிளினி.

28. மக்கம் – மெக்கா, பள் – உதவியாள்.

30. தத்தெடுத்த பிள்ளை - தத்த புத்திரி, பெற்றோர் மனமுவந்து கையளித்துக் கொடுக்கப் பிறரொருவரால் ஏற்கப்பட்ட பிள்ளை, கோதாட்டி - சீராட்டி.

---

௳

## விஜயன் வருகைப் படலம்

1. கடற் சங்கமம் – கடலோடு கலத்தல், வங்கம் – வங்காளம்.

2. போதும் – தோன்றிய.

3. தான வெங்களிறு – மத வெம்மையுள்ள யானை.

4. சப்தசதர் - எழுநூறு பேர், வயங்க - விளங்க.

5. ஔதாரியம் - உதாரத்துவம், தாராளமாய் உதவும் பண்பு, அரச நிமித்திகள் - அரண்மனைச் சோதிடன். ஏயுமாறு - பொருந்துமாறு.

6. பிதிரார்ச்சிதம் - தந்தைவழியுரிமை, சிந்து – கடல்.

8. மைந்துகூர் - வலிமை மிக்குள்ள, பர நிலம் - வேற்றுத்தேசம், ஆள்தற்கு உகந்த ஆற்றல்.

9. ஆற்றல் மருவு + எழுநூறதாக. என்பது + உற + தெரீஇ, உறத் தெரீஇ - நன்கு தெரிந்து.

11. பாழி - பெரிய. மா பாய் மரக்கலம் - பெரிய பாய்க்கப்பல். ஆழிப் பாவீன - கடற் பயணத்தில் உபயோகிப்பது. ஏழிஞு லுறழ் நூறு - 100 × 7.

12. ஏந்தல் - உயர்ந்தவன். பாகு - புயம்.

13. ஐங்குழு - ஐம்பெருங்குழு - மந்திரி, சேஞுதிபதி முதலிய ஐந்து பகுதியார். வந்தியர் மாகதர் - அரசவைபவங்களிற் பாடற் பணி புரிவோர்.

16. பல்கு வீரப் பராரி - அதிகரிக்கும் விரத்தாற் பகைவர்க்குச் சிங்கம் போல்பவன். பர + அரி = பராரி. புல்கும் - பொருந்தும்.

17. கேதனம் - கொடி. துர்லபம் -வாய்த்தலரிது.

18. அலேமுகடு + உழக்கி. கால் உளர் நிலேமை - காற்று அசையும் நிலேமை.

23. நாகபட்டம் - நாகபட்டினம். காவேரிப் பட்டம் - காவிரிப் பூம் பட்டினம். அண்மும் - சமீபிக்கும். ஈழத்தண்மும் - ஈழத்தைச் சமீபிக்கும்.

26. ஊறு முன் ஐந்தும் ஒன்றி : ஊறு - பரிசம். பரிசம்முதலாயஐந்தும் ஐம்புலன்கள். உயிர் பரித்து - உயிர் தாங்கி.

31. மலேத்து நின்றிடம் - மலேத்து நின்ற + இடம். மலேத்து - தியங்கி அந்தரம் - இடைத்தூரம்.

33. முன்ஞுத் துன்றும் - முன்ஞுகவே அமைந்திருக்கும். நின்றவர் பாங்கு உசாவி - நின்றோரிடம் விசாரித்து.

34. உரவு - வலிமை. அருகுமாறும்- சுருங்கியவாறும். புலத்தி - புலஸ்தி நகரம், பொலனறுவை. முன்ஞுன - முதலிய உபராச்சியங்கள், தன்னரசாவார் - தான்தோன்றிகள். தட்டழிதல் - தடுமாறுதல்.

36. ரமித்திருந்திடுதல் - மகிழ்ந்திருந் திடுதல். ஏதில் - காரணமில்லா.

39. தீது + ஒட்டும்+ அருள் - தீமையைத் துரத்தும் அருள். காது+ ஒட்டும் + கேள்வி - செவிவழிக் கேள்வி. ஊது + ஒட்டும் + உயிர்ப்பு ஊதிச் செலுத்தும் பிராணன். மீது+ ஒட்டும் - மேற் செலுத்தும்

41. நாரயணன் முன்ஞு ஐவர் - நாராயணன், பராக்கிரமன், அபிஷேகன், அசரணன், தேவநாராயணன் என்போர். (விஜயன்தோழர்கள்)

44. விசுவகன்மர் ஆரும் ஆணிலாமை - விசுவகன்மப் பிராமண மரபில் ஆண் யாரும் இல்லாமை.

45. அந்த நன்நிலேமை - விசுவகன்தப் பிராமணரைக் கொண்டே முடி சூட்டுவித்துக் கொள்ளும் நிலேமை. தேற்றும் - தெரிவிக்கும்.

46 அஃதே மத்திய நிலையமாக – அநுரதபுரியே ஆட்சி மத்திய நிலையமாக. கொன்னுறும் ஆணைச் சக்கரம் – பெருமைக்குரிய ஆஞ்ஞாசக்கரம்

48. சிவபதந்தமது பேரிற் கொண்டது – மூத்தசிவன், மகாசிவன் எனப் பெயர் தாங்கிக் கொண்டது.

49. விஜயன் காலத்தில் இருந்த சில சொல்வழக்குகள் பின்னைய மொழி மாற்றத்தால் உருமாறியமை தெரிவிப்பது இச்செய்யுள் சிவிகசாலா–மகாவம்சம் முதலியவற்றில் சிவன்கோயில் குறிக்குஞ்சொல். இவ்வாறே பமனன் – பிராமணன், நவத்தன்னே – கண்ணாளர். புதிது காண் போர். கம்சல – கம்மாளன்.

51. ஒருத்தர் – ஒப்பற்ற தலைவரான கேதீசர்.

56. குலவுறக் குறைவறுத்து – விளங்குதற்குக் குறைவிலா ஏற்பாடு செய்து

58. ஓமந்தை – ஓவியர் மாந்தை என்பதன் மரூஉ. பொலனறுவை–புலனரவை என்பதன் திரிபு. புலனர் – புலன் + நர் – அறிவுத் தொழிலர் அதாவது ஆராச்சியாளர்.

60. கூழ் – உணவு. அரசுக்கு அங்கமாகத் திருவள்ளுவர் கூறும்படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்ற ஆறில் மூன்ருவது.

61. சாக்கிய முனி – புத்தர். தராதலம் – உலகு. விண்சேர்ந்த – பரிநிர்வாணமெய்திய. கலி – கலியுகம். கலிஇராயிரத் தைஞ்ஞாற்றைம் பத் தெட்டென மாறுக.

62. வசை – குற்றம் ஈராயிரத்து முந்நூறு ஆண்டு. விஜயனுட்சி ஆரம்பத்திலிருத்து கன்டிராச்சியம் ஆங்கிலர் கைப்படும் வரையுள்ள இடைக்காலம்.

அருஞ்சொல் விளக்கம் முற்றும்

| விஷய சூசிகை | பக்கம் செய்யுள் |
|---|---|
| நடேசர் நிலை காட்டும் நயம் | 1 - 4 |
| கேதீச்சர கணபதி நர்த்தன தாற்பர்யம் | 2 - 7 |
| சைவ நோக்கில் விஷ்ணு வழிபாடு | 3 - 12 |
| பிரமன் பிரார்த்தனை | 4 - 18 |
| சம்பந்தர் அக்கரையி லிருந்து பாடியதன் அடைவு | 6 - 28 |
| அறுபத்து மூவர் வரலாற்றுண்மைகள் மூன்று | 8 - 14 |
| பாரத ஈழ அணுக்கநிலை அழகு | 11 - 2,3 |
| வேகாவன மாண்பு | 12 - 16 |
| ஆதிநாகர் பிரபாவம் | 14 - 29 |
| சைவத்துக்ளோர் ஜெயத்தம்பம் | 14 - 30 |
| ஈழப் பொய்பழி துடைக்கு மேது | 16 - 38 |
| சிவஞெளி பாதச் சூர்யோதயக்களி | 16 43 - 44 |
| பச்சையாலிலையிற் பரந்தாமன் காட்சி | 17 - 45 |
| ஈழ லக்ஷ்மி கொலுவிருக்கை | 17 - 46 |
| முல்லைத் தெய்வம் மாயனுனவாறு | 19 - 64 |
| முல்லைப் பண்பாட்டருமை | 70 20 - 71 |
| சேனைச் செய்கையில் ஞானக் காட்சி | 21 - 77 |
| வனவாழ்க்கை மாண்பியல் | 80 - 82 |
| இந்திரன் கண்ணுயிரம் பெற்ற பயன் | 23 - 96 |
| உழத்தியர்.இளம்பயிர்-தாய்.சேய் | 24 100 - 101 |
| விஸ்வகன்மர் வரலாறு | 30 23 - 27 |
| காந்தக் கோட்டை மாண்பு | 31 34 - 38 |
| சுத்தாசுத்த தத்துவம்-இடைநகர் | 36 - 73 |
| கோயில் வீதி வளம் | 39 - 96 |
| பூசைக்கு நாத மின்றியமையா வாய்மை | 41 113 - 115 |
| பாலாவி யுற்பத்தி | 43 1 - 2 |
| சைவச் சான்றேரும் பாலாவியும் | 45 - 20 |
| பாலாவியில் வைகைக் காட்சி | 46 - 29 |
| வாணிபர் அவலம் | 50 10 - 15 |
| கனவுக் குளுமை | 52 - 53 29 - 36 |
| அகத்தியர்ப் பராவல் | 56 57 - 5 |
| அகத்தியர் சங்கற்பம் | 57 66 - 69 |
| கைலை மாண்பு | 58 - 61 1 - 20 |
| வாயு-சேடன் சம்வாதம் | 62 ,28 - 32 |
| மேருசிகரப் போர் | 63 - 64 39 - 44 |
| மாதோட்டத்தில் அகத்தியர் | 65 - 66 57 - 59 |

| | | |
|---|---|---|
| பிரதோஷ காலப் பிரத்தியேக வழிபாட்டுண்மை | 69, 70 | 21 — 56 |
| கேது அரவச்சிரம் பெறல் | 72 | 36 — 37 |
| கேதீசன் நாகநாதர் ஆன காரணம் | 72 | 40 |
| சிவபூசையிற் கேது செபம் | 73 | 48 — 50 |
| சீகண்டேசர் பிரதிஷ்டை | 75 | 60 — 61 |
| துவஷ்டா தோற்றம் | 76 | 3 |
| பாலாவிச் சோலையில் துவஷ்டா | 77 | 10 — 13 |
| துவஷ்டாவின் சிவோஹம் பாவனை | 78 | 19 — 21 |
| ஆவாகனுதி முத்திரை விளக்கம் | 79 | 30 —31 |
| அபிஷேக தத்துவம் | 80 | 33 —34 |
| நைவேத்திய தத்துவப் பின்னணி | 82 | 48 |
| தூபதீபாராதனை நோக்கம் | 83 | 51 |
| துவஷ்டா பஞ்சாக்ஷரத் தியானம் | 83 | 54 |
| துவஷ்டாவின் போதம் பில்குளப் பொறுதி | 85 | 61 — 62 |
| மாதோட்டம் உலகச் சந்தையா யுருத்தல் | 90 - 91 | 14 ... 20 |
| துவஷ்டா முடிசூட்டு வைபவம் | 92 – 94 | 28 — 45 |
| துவஷ்டாவின் ஆணைவலு | 96 | 57 - 58 |
| இராவணன் மண்டோதரி–மாதோட்டப் பிள்ளைகள் | 97 | 1—3 |
| மண்டோதரி சிவபக்தி மாண்பு | 100 | 26 |
| மண்டோதரி அபர காரைக்காலம்மை | 102 | 43 |
| திருக்கேதீச்சரன் திருவிளையாடலிற் கௌரியம்பாள் துரிதம் | 104 | 105 |
| சங்கத் தமிழில் மாந்தை | 109 | 16 – 19 |
| மாந்தைக் கண்ணுளர் மஹத்துவம் | 110 | 26 |
| விஜயன் தென்திசை நோக்கிய காரணம் | 112 | 6 |
| கேதீச்சரன் அருட்குறி காட்டல் | 115 | 28 |
| விஜயமன்னன் பட்டாபிஷேகம் | 117 | 41 – 42 |
| விஜயன் கேதீச்சரப் பணி | 118 | 51 |
| விஜயனுட்சியிற்சைவமணம் | 119 | 57 |
| பூப்புரை யஞ்சலி காந்தள்காட்ட(விளக்கம்) | 73 | 46 |
| துவஷ்டா மகிழ்வினுட் கேதீசர் மகிழ்வு | 80 | 39 |
| பூசையில் திரவிய வாசனைப் பயன் | 81 | 49 |
| துவஷ்டா திருவுரு | 84 | 57 |
| குழந்தையுருவிற்கேதீசர் | 103 | 50 |
| இராவணன் திசைக் கரிக்குத் திறந்த மார்பளித்த மர்மம் | 102 | 45 |


விஷய சூசிகை முற்றும்